செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு

8T4
JAMAL MOHAMED COLLEGE, TIRUCHIRAPALLI
11 JUL 1966
LIBRARY

Rs. 6-00

Senthamil Selvi By Saiva Siddhanta works

A-13927.

894.811092
SENT
V34

Vol. XXXIV 1959—1960

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

முப்பத்துநான்காம் சிலம்பு

Sentamil Chelvi Silambugal
JMCLib
00013927

௧௯௯௦—௧௯௯௧

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd.,
Tirunelveli. :: Madras-1.

[Rights Reserved] [Price Rs. 6-00

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்
EDITORIAL BOARD MEMBERS

க. திரு. செந்தமிழ்க் காவலர், டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், எம். ஏ., பி. எச். டி., எம். எல். சி.
சென்னை.

உ. ,, சித்தாந்த கலாநிதி, வித்துவான்,
ஒளவை, சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
தியாகராயர் கல்லூரி, மதுரை.

ரு. ,, பேராசிரியர், மு. இராசாக்கண்ணனுர் அவர்கள்,
பி. ஓ. எல். (ஆனர்சு), எம். இ. எஸ்.,
இந்திய மொழித்துறைத் தலைவர்.
மலேயாப் பல்கலைக் கழகம், சிங்கப்பூர்.

ச. ,, செந்தமிழ்க்கலைமணி, வித்துவான்,
பண்டித. கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி. ஏ., (ஆனர்சு), எம். ஏ., பி. ஓ. எல். (சென்னை)
அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி,
கொழும்பு.

ரு. ,, கு. பரமசிவம் அவர்கள், பி. ஏ. (ஆனர்சு),
தமிழ் விரிவுரையாளர்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

சா. ,, க. கோவிந்தராசன், பி. ஏ. (ஆனர்சு), பி. டி.
தமிழ்ப் பேராசிரியர்,
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.
சைதாப்பேட்டை, சென்னை.

எ. ,, சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை அவர்கள்,
கழகப் புலமையாளர்.

அ. ,, பண்டித வித்துவான், தி. சங்குப்புலவர் அவர்கள்,
கழகப் புலமையாளர்.

உள்ளுறை

அச்சப்பத்து
—நல்லைக்கவி இளங்கோவன் சகூஉ
அச்சுக்கு வாராத அருந்தமிழ்ச் செல்வங்கள் சருக
அஞ்சல் தலையும் திருவள்ளுவரும் ந௦ரு
அடைக்கலப் பத்து
—நல்லைக்கவி இளங்கோவன் சசசு
அமரர் சண்முகம்
—திரு. M. N. நாகரத்தினம், B. A., ந௦
அமெரிக்கத் தலைவர் ஐசனேவர் இந்தியா வருகை உருக
அமைதி
—வித்துவான், மாவை. துரை. பழநிமகாதேவன்,
ஆம்பூர் நஎ௦
அமைதி எய்துக !—நாஞ்சில், திரு. கா. கணபதி நகூஎ
அருளோன் அடிசார் அண்ணல்
சதாசிவ பண்டாரத்தார் உசஅ
அறக்கொடை வடிவினர் அருணந்தித் தம்பிரானடிகள்
—கழகப் புலவர், திரு. ப. இராமநாத பிள்ளை எக
அறிவீரே!
—வெண்பாவூர், பொ. திருஞானம் சநச
ஆட்சிமொழி பொதுவாம் ஆங்கிலமே நன்று ருருச
ஆதன் அவினி
—திரு. பா. பாப்பு இராமநாதன் சஅகூ
ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவ பண்டாரத்தார்
வாழ்க்கை வரலாறு
—திரு. T. S. நடராச குருக்கள், பி. ஏ., எல். டி. உஎந
ஆவியுலகத் தொடர்பாளர்
நெல்லை, இரா. ந. குற்றாலலிங்கம் பிள்ளை அகூ, உகசு
ஆனுங்கூர் அகத்தீச்சுரர் கல்வெட்டுக்கள்
—வித்துவான், இரகுபதி பாலசுப்பிரமணியன் சநந
இந்திரப் புரட்சி
—வித்துவான் அ. பாலசுந்தரக் குருக்கள் சுசு
இயற்கை (ஆவியுலகச் செய்தி) சுந
க௦ச, கருரு

இயற்கை எய்திய சக்கரவர்த்தி நயினர் M.A., L.T. I.E.S. ௩௧௯
இரங்கற் கூட்டம் ௨௬௪
இராயபுரம், தென் இரயில்வே தமிழ்மன்றப்
பொங்கல் விழா ௩௪௮
இலக்கியத்திறனய்வு
—திரு. ச. அகத்தியலிங்கம், M.A., B.SC. ௪0௭
இலக்கியமும் உணர்ச்சியும்
—திரு. தி. ந. அறிவு ஒளி ௫௭௯
இழிசொல் ஏன்றல் என்னே—திரு. அ. கணேசன் ௫௭௮
இளமைபெற்ற கதை
—திரு. சு. அ. இராமசாமிப் புலவர் ௪௩
இறையடி எய்திய செல்லூர்க்கிழார்
இராமசாமிப் பிள்ளை ௩௫௪
இறையருள் - நாஞ்சில், திரு. கா. கணபதி ௩௨
இறைவன் துணை - நாஞ்சில், திரு. கா. கணபதி ௪௪௫
இன்புற என் தனி நாடு எழுக!
—வித்துவான், மாவை. துரை. பழநிமகாதேவன் ௪௪
ஈடிலான் சிவன் ௨௯
உணர்க அன்னேர்!
—வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர் ௩௯௮
உறக்கத்தின் பொருள் என்ன?
—கடலூர், பெரு. இராமச்சந்திரன் ௧௧௮
ஊதடா சங்கு - திரு. ஆ. துரைக்கண்ணு ௧௬௪
ஓவியம்—திரு. தி. நா. அறிவு ஒளி ௩௨௭, ௩௭௧
கடவுட் கழலிணை எய்திய நாவலர்
ச. சோமசுந்தர பாரதியார் ௧௯௩
கலைக்களஞ்சியம் ஏழாந் தொகுதி வெளியீட்டு விழா ௫௧௩
கலைமகள் வணக்கம் (ஆவியுலகச் செய்தி) ௧௬௬
கவுந்தியடிகள்—திரு. மது. ச. விமலானந்தம், எம். ஏ.
௩௨௧, ௩௮௧, ௪௪௩
களவு மகன்—திரு. பி. எல். சாமி. பி. எஸ் ஸி ௧௧௯
களை அகற்றுக!—நாஞ்சில், திரு. கா. கணபதி ௫௪0
கள்வனும் களவனும்
—வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனர், மயிலம் ௮௫
கற்றபின் கூறு!—திரு. பொ. திருஞானம் ௩௬௫
காலை இசைப்பா—திருவாட்டி. C. பத்மாவதி எம்.ஏ. ௫௭௭

குரீஇ யொலியும் குணக்கெழு கதிரும்
—திரு. ஆதி முருகவேள் ருங0
குறள் தந்த வள்ளுவர் குந்தகுந்தரா?
—வித்துவான், அ. பாலசுந்தரக் குருக்கள் உசக
கொட்டடா முரசு!
—திரு. ஆ. துரைக்கண்ணு ருஉகூ
கோவில் திருப்பணியும் கோன் ஆட்சியும் சருஎ
சித்தாந்த சைவத் தேர்வுகள் ஙஅ
சிலம்பிலே செங்குட்டுவன்
—திரு. மது. ச. விமலானந்தம், எம். ஏ. ருஙக, ருசுங
சிவத்திரு. சேலம், கி. சுப்பராய பிள்ளை அவர்கட்கு நிகழ்த்திய பாராட்டு விழா ஙகஅ
சிவனடி சேர்ந்த சுப்பையதாசு உசசு
சின்மய தேசிகர்
—திரு சு. அ. இராமசாமிப் புலவர் சஎக
செந்திலாண்டவன் செய்தருளுஞ் சிறப்புத் திருவருள்
—சித்தாந்த பண்டிதர், ப இராமநாத பிள்ளை சஙரு, சசுஎ
செய்திகளும் குறிப்புக்களும்
—சரு, கூங, கசக, ககூ0, உருச, ங0க, ஙருங, ஙகூகூ, சசஎ, சகூங, ருசங, ருகூக
'செல்வி' கட்டுரையாளர்கட்கு ககூக
சென்னை மாநிலத்தில் கல்வி நிலையங்களின் வளர்ச்சி ரு0சு
சைவ சமயச் சீர்திருத்தம்
—பண்டித. திரு. கா. பொ. இரத்தினம், எம். ஏ. இலங்கை உஙங
சைவசித்தாந்த சமாசத்தின் மாநாடு உசஎ
சோலையப்ப சுவாமிகள்—திரு. சு. அ. இராமசாமிப்புலவர் ருருரு
ஞானியாரடிகள் நல்லுரை (ஆவியுலகச் செய்தி) ஙகூ
டாக்டர். எஸ். ஆர். அரங்கநாதன் சொற்பொழிவுகள் ககூஉ
டாக்டர். சு. சங்கரராசு, எம். ஏ, பி. எச். டி. வாழ்க்கைக் குறிப்பு ஙசுசு
தங்கப்பாவை
—வித்துவான், திரு. தி. பொ. நாராயணசாமி பார்தி, உத்தமபாளையம் ருஙஅ
தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்
—திரு. எ. சி. பால்நாடார் கங

தமிழகப் புலவர் குழு மூன்ருவது கூட்டம் அசு
தமிழர் நாகரிகம்
—திரு. ஹுமாயூன் கபீர் கஅரு
தமிழன்னை - பண்டிதமணி (ஆவியுலகச் செய்தி) கசாகூ
தமிழிசையும் கர்னுடக சங்கீதமும்
—இசைத் தமிழ்ச்செல்வர்,
திரு. இலக்குமண பிள்ளை பி. ஏ. உகூசு
தமிழிசை விழா உ௫0
தமிழின் பெருமை—சித்தாந்தச் செல்வர்,
திரு. டி. சி. சண்முகசுந்தரம் பிள்ளை, நெல்லை கஎ
தமிழ் கற்றவை—மேட்டூர்—தேன் மழை அஅ
தமிழ்ச் செய்தித்தாள்களும் தமிழும்
—புலவர், திரு. வி. போ. பழனிவேலன், பி. ஓ. எல். ௫எ0
தமிழ்த் திருநாள்—C. பத்மாவதி எம். ஏ. உ௫உ
தமிழ் நாட்டுப் பள்ளிச் சீரமைப்பு சகூசு
தமிழ்ப் புலமை சான்ற தனபால பத்மாவதி
அம்மையார் மறைவு ச௫௫
தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வு சக
தனித் தமிழ்ப் பகைஞர் க
தாராபுரம் விவேகான ந்த சபையின் தீர்மானங்கள் சஉ
திருக்கயிலை சென்று திரும்பிய அடிகள் அக
திருக்கோளிலிக் கல்வெட்டுக்கள்
—வித்துவான், திரு. வை. சுந்தரேசவாண்டையார் ௩கூ௫
திரு. செல்லூர்க்கிழார் செ. ரெ. இராமசாமி பிள்ளை
யவர்கள் மறைவு குறித்த இரங்கற்பாக்கள் ௩கூச
திரு. டி. வி. சதாசிவ பண்டாரத்தார் மறைவுக்கு
இரங்கற் செய்திகள் உஅ௫
திரு. தி. வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள்
கடவுள் திருவடி எய்துதல் உ௫எ
திருநெல்வேலி கஉஆவது தமிழ்த் திருநாளில்
மூன்ருவது சிற்றிலக்கிய மாநாடு ௩சாச
திரு. பா. வே. மாணிக்க நாயகர் கடிதம்
(ஆவியுலகச் செய்தி) உகஎ
திருப்புனந்தாள் காசிமடத்தாரின்
திருமுறைக் கொடைப் பொருள் உ௫௫
திருமணத் திருவாழ்த்து (ஆவியுலகச் செய்தி) சூ

திரு. மறைமலையடிகளின் திறன்
—திரு. பா. வே. மாணிக்க நாயகர்
(ஆவியுலகச் செய்தி) உகஅ

திருவருள் பெற்றார் செயலனைத்தும் சிவன் செயலே
கூஎ, கசரு

திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதி பகவன்
—வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம். சகசு

திருவாட்டி இராதாபாய் சுப்பராயன் மறைவு சகூசு

திருவாட்டி ஈ. த. இராசேசுவரி அம்மையார் கடிதம்
(ஆவியுலகச் செய்தி) உ௨0

திரு. வி. க. அவர்களின் கடிதம் (ஆவியுலகச் செய்தி) ககூரு

தீப நாடகங்கள்—திரு. பா. பச்சையப்பன் ஙங, எரு,
கஙரு, கஅஎ, உகூரு, ஙஙங, ஙஎஅ, சகங, சஅங

தூயோன்—வித்துவான், நெல்லை. க. சுப்பிரமணியன் ருருச

தெ. இ. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக
அறநிலையங்களின் தேர்வுகளின் அறிக்கை கஅஉ

தெய்வத் திருமறை—சித்தாந்த பண்டிதர்,
திரு. ப. இராமநாத பிள்ளை உரு

தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி
தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வு சஉகூ

தேவையா?—வித்துவான், திரு. ச. சவரிமுத்து சகூஉ

தேனின்பம் அடைந்திடுமே!
—வெண்பாவூர், திரு. பொ. திருஞானம் கூஉ

தைப்பொங்கற் பெருவாழ்த்து—திருவாட்டி,
தி. நீலாம்பிகையம்மையார் (ஆவியுலகச் செய்தி) ஙகசு

தைப்பொங்கல் வாழ்த்து (ஆவியுலகச் செய்தி) உகூரு

தைப்பொங்கல் வாழ்த்து விளக்கம்—திருவாட்டி,
தி. நீலாம்பிகையம்மையார் (ஆவியுலகச் செய்தி) ஙகரு

தொடர்மொழி
—வித்துவான், திரு. வே. சிவசுப்பிரமணியன் கஉகூ

தொல்காப்பியத்தில் ஓரறிவுயிர்
—திரு. மு. அரங்கராமாநுசம் கஎஉ, ககூங

தோழி தந்த வாழ்வு
—திரு. மருதூர் இளங்கண்ணன், M. O. L. ககஉ

நக்கீரர்—திரு. சோ. ந. கந்தசாமி, பி. ஏ. (ஆனர்சு)
கஉங, ௨உஎ, உஅகூ, ஙஅஎ

நம்பி திருமுருகனார் திருமடம்
—புலவர், திரு. ச. கணபதிராமன், எம். ஓ. எல். ருஅஅ
நன்கு வாழ்வீர்—நாஞ்சில் திரு. கா. கணபதி அ0
நாவலர் பாரதியார், ஆராய்ச்சிப் பேரறிஞர்
சதாசிவ பண்டாரத்தார் நினைவுக் கூட்டம் ௩௩எ
நாவலர் பாரதியார் மறைவுக்கு இரங்கல் ககசுக, உக0
பண்டிதமணியவர்கள் முடங்கல் (ஆவியுலகச் செய்தி) கசுஅ
பண்டைப் பிரித்தானியர் சைவ சமயத்தினரா?
—வித்துவான், மாவை - துரை. பழநிமகாதேவன்
ஆம்பூர். ருகரு
பதவிப் பித்தர்!
—வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர் களசு
பயனற்ற இந்தி—மறைமலையடிகள் ருஅஎ
பல்கலைக்கழகம் கற்பிக்கும் மொழியும் தமிழே ச0௩
பாரதத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தென்னாடு
தந்திருக்கும் உதவிப் பங்கு—கோவைகிழார் உசுசு
பாரதியாரின் உள்ளாற்றல்
—நாஞ்சில், திரு. கா. கணபதி உச0
பாரதியார் பண்டாரத்தார் இவர்களின் நினைவுக்
கூட்டக் கையறு நிலைகள் ௩சசு
பால் பொங்குகவே—புலவர் அரசு உசஅ
"பெண்ணினத்திற் கொரு நல்லுரை"
(ஆவியுலகச் செய்தி) உருசு
பெண்ணின் கடமை
—திருவாட்டி இராசேசுவரி அம்மையார் உஉக
பெண்ணின் பெருமை (ஆவியுலகச் செய்தி) க0சு
"பெயர் சொல்லாப் பெரும் புலவர்"
—திரு. கி. இரா. திருமலையப்பன், தென்காசி ருசக
பெருவிழாச் சிறப்பு ருகஎ
பேராசிரியர், மயிலை. சிவமுத்து அவர்கட்குப்
பாராட்டு விழா சருச
பொங்கல் வாழ்த்து (ஆவியுலகச் செய்தி) உசு௩
பொங்கல் வாழ்த்துக்குரிய விளக்கம்
(ஆவியுலகச் செய்தி) ௩கக
பொங்கற் புதுநாளில்!
—வித்துவான், சொ. சிங்கார வேலனர் உ௩சு

பொருள் தலைப்புக்கள் கஙச
மக்கள் பண்பாடும் மகளிர் நிலையும்—வித்துவான், சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, M. A. மயிலம். ருககூ, ருருகூ
மணிவிழா மாண்பு—சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாத பிள்ளை கூச, க0க
மதிப்புரை — சஎ, கூரு, கசச, ககூஉ, உருசு, ங0ச, ஙருக, ச0க, சசகூ, சகூஎ, ருசரு, ருகூங
மதுரை சைவசித்தாந்தப் புத்தக நிலையத் திறப்பு விழா ருகச
மதுரைப் பழம்பதி மாண்பு (ஆவியுலகச் செய்தி) சஎசு, ரு0எ
மயக்கொழிக—தொண்டன் உச
மலரில் மலர்ந்த மலர் —திரு. ஈ. வே. வேங்கடசுப்பிரமணியம் உஅ
மலைக்கண் பிறந்த மணி—திரு. ஆதிமுருகவேள் ருங0
மறைமலையடிகளார் மாண்பு —திரு. ஆ. பழ. குமரப்பன் கக
மறைமலையடிகளின் சொல்லாட்சி —வித்துவான், நெல்லை. க. சுப்பிரமணியன் ருஉஎ
மறைமலையடிகளின் தமிழ் நடை —வித்துவான், நெல்லை. க. சுப்பிரமணியன் ஙசுஅ
மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு நிதி அமைச்சர் சுப்பிரமணியம் வருகை ஙஉ0
மறைமலையடிகள் நூல் நிலையத்தின் முதலாண்டு நிறைவு விழா (தலையங்கம்) சகூ
மறைமலையடிகள் நூல் நிலையம் (சொற்பொழிவுகள்) உஙரு
மறைமலையடிகள் நூல் நிலையத்தின் முதலாண்டு நிறைவு விழா வாழ்த்துரை (ஆவியுலகச் செய்தி) சு0
மாத்தமிழும் மகரவீறும்—புலவர், தேவி. கவிமணிதாசன் ருஎங
மிளகு பயருன கதை —திரு. சு. அ. இராமசாமிப் புலவர் உஅஅ
மீண்டு வந்தெய்திய திருத்தணிகை வெற்றி விழா ஙருரு
முதற் பாவலரும் பெருநாவலரும்—மதுரைச் சிவம் உஙஎ
முந்நூல்— நாஞ்சில், திரு. கா. கணபதி ருகூ0
மேற்கு செர்மனி பான் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ் எழுத்தொலி ஆராய்ச்சியாளர் சகூஎ

மொக்கணீசுரன் கதை

திரு. சு. அ. இராமசாமிப் புலவர் சுக

வடநாட்டில் தமிழ் பயிற்றல் ருகச

வாழ்விசைப்பா

—*தமிழாக்கம்: கு. பரமசிவன், எம். ஏ.* உருந

வித்துவான். திரு. மு. இராகவையங்கார் அவர்கள் மறைவு ந0ந

வேண்டாப் பத்து—*நல்லிக்கவி இளங்கோவன்* ருகஅ

வேலிக்கு வெளியே (Life beyond death) (ஆவியுலகச் செய்தி) உகந

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் கடிதம் சஎரு

Satement about ownership and other Particulars about the journal - 'Sentamil Selvi' as required by rule 8 of the Registration of News paper (Central) Rules (1956) நசகூ

படங்கள்

அருளிசைப் புலவர் சிவத்திரு, பூ. மாரியப்ப அடிகள் ௪0௩

சிலம்புச் செல்வர். திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் ௩௫௫

சிவத்திரு. சேலம். கி. சுப்பராய பிள்ளையவர்கட்குப் பாராட்டு விழா :

சிவத்திரு. கி. சுப்பராய பிள்ளை,
கழகப்புலவர் திரு ப. இராமநாத பிள்ளை,
கழக ஆட்சியாளர். திரு. வ. சுப்பையா பிள்ளை. ௩௧அ

சிவத்திரு. கி. சுப்பராய பிள்ளையவர்கட்குப் பாராட்டு விழா:

(1) திரு. அ. உத்தண்டராம பிள்ளை தலைமை தாங்குதல்.
(2) பாராட்டு விழாவிற் கலந்துகொண்ட பெருமக்கள். ௩௧௯

சென்னை மாநிலக் கல்வித்துறை இயக்குநர். திரு. நெ. து. சுந்தர வடிவேலு, எம். ஏ., எல். டி. ௪௯௯

டாக்டர் சங்கரராசு அவர்கட்கு டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் பரிசு வழங்குதல் ௩௬எ

டாக்டர். C. R. சங்கரன் ௪௬எ

திருநெல்வேலி, திரு. இரா. ந. குற்றாலலிங்கம் பிள்ளை [ஆவியுலகத் தொடர்பாளர் (Auto writer)] அ௯

நாவலர், கணக்காயர், டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் ௧௯௩

மங்கலகிழார் திரு. குப்புசாமி முதலியார் ௩௫௫

மணிவிழாக் கொண்ட மாண்பினர், திரு. ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் ௧அ௬

நாவலர், சோமசுந்தர பாரதியார், ஆய்வறிஞர் சதாசிவ பண்டாரத்தார் நினைவுக் கூட்டம்:

(1) அமைச்சர். சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை உரையாற்றி நூலை வெளியிடுதல். ௩௩௬
(2) செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் பாரதியார் உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசுதல். ௩௩௬
(3) பேராசிரியர், கோ. சுப்பிரமணிய பிள்ளை பண்டாரத்தார் உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுதல். ௩௩எ
(4) நாவலர் பாரதியார், ஆய்வறிஞர் பண்டாரத்தார் திருவுருவப் படங்கள் திறந்துவைக்கப்பட்டிருத்தல். ௩௩எ

மதுரை சைவசித்தாந்தப் புத்தக நிலையத் திறப்பு விழா:

(1) புத்தக நிலையத்தைக் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் திறந்து வைத்தகாலை எடுத்த படம். ௫௪௯

(2) கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள், நிலைய உரிமையாளர் மீ. சண்முகம் அவர்கள், வருகை தந்த பெருமக்கள் ஆகியோர். ,,

மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு நிதியமைச்சர் வருகை தந்தகாலை கழக ஆட்சியாளர்களும் அலுவலர்களும் வரவேற்றல். ௩௨௦

மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு வருகை தந்த நிதியமைச்சரவர்கட்குக் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை, அடிகளார் படித்துப் பாதுகாத்து வைத்த நூல்களைக் காட்டுதல். ௩௨௧

மறைமலையடிகள் நூல் நிலைய ஆண்டு விழாக் காட்சி: ௪௯

ஷை விழாவில் சங்க அமைச்சர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல். ,,

ஷை விழாவில் உயர்நீதி மன்ற நடுவர் திரு. வி. சுப்பிரமணிய நாடார் அவர்கள் தலைமையுரை ஆற்றுதல். ,,

ஷை விழாவில் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் மறைமலையடிகள் வரலாற்று நூலை வெளியிடுதல். ,,

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௦, ஆவணி	பரல்
௩௪	செப்டம்பர், 1959	௧

தனித்தமிழ்ப் பகைஞர்

ஆருயிர்கள் "ஓரறிவு முதல் ஆறறிவு" எனச் சொல்லப் படும் அறுவகையான உணர்வுநிலை வேறுபாடும், ஊர்வன முதல் நிலைத்திணை எனச் சொல்லப்படும் எழுவகை உடல் நிலை வேறு பாடும் உள்ள பல்வகைப் பிறப்புக்களை விழுமிய முழுமுதல்வன் திருவருளால் பெறுகின்றன. பெற்று இருள்சேர் இருவினையும் நீங்கி, அருள்சேர் இறைபணியினேங்கிச் சிவபெருமான் திருவடி யின்கண் சேர்ந்து என்றும் பொன்றா இன்பம் நுகர்கின்றன. இவ்வின்ப நுகர்வு எய்துதற்கு வாயிலாகிய ஏற்றஞ்சால் பிறப்பு மக்கட் பிறப்பேயாகும். ஏனைப் பிறப்புக்களினின்று மக்கட் பிறப்பு உயர்ந்ததென்பது எதனால் பெறப்படுகின்றதெனின்? ஏனைப் பிறப்புக்களான் எய்தமுடியாத விழியினும் சிறந்த அழி விலா மொழி ஒன்றினானேயாம்.

உயிர்க்கு உடம்பு சிறந்தது. அவ்வுடம்பினைப் பெறுதற் குத் துணைக்காரணமாய் அமைந்த தாய் தந்தையர் அவ்வுடம்பி னும் சிறந்தோராவர். அவ்வுயிரினும் சிறந்ததொன்று அதற்கு உண்டெனின், அஃதொழுக்கமேயாம். இவ்வுண்மை வரும் செந்தமிழ்ப் பொதுமறையானுணரலாம் :

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்." —திருக்குறள், ௧௩௧.

அவ்வொழுக்கத்தினும் சிறந்தது ஒன்று உண்டெனின், அஃது என்றும் இயல்பொடு நின்று துணைபுரியும் மொழியே யாம். அம்மொழி தாய்மொழி எனவும் சேய்மொழி எனவும்

இருவகைப்படும். தாய்மொழியென்பது தாயினுல் பிறந்த நாள் தொட்டு பயிற்றுவிக்கப்பட்டுப் பயிலப்பெறும் பிறப்புமொழி. ஈண்டுப் பிறப்பென்பது உடலுயிர்ப் பிறப்புப்போல் உணர்வுயிர்ப் பிறப்பாகும். இதனையே காரைக்காலம்மையார் வருமாறு அருளிச்செய்தனர் :

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்." —அற்புதத்திருவந்தாதி, க.

அம் முறையினுல் தாய்மொழி நற்றாயினையொக்கும். சேய்மொழி என்பது தொலைவிலுள்ள மொழியென்பதாகும். சேய்மை-தொலைவு. அம்மொழி அறிவு பெருகற்பொருட்டுப் பிறர் கருத்தினையும் ஒப்புநோக்கி ஆய ஆசானுல் அறிவுறுத்தப்படுவதாகும். அங்ஙனமன்றியும் வந்தேறியும் சென்றேறியும் வேற்றுமொழியாளரொடு கலப்புற நேர்ந்தமையான் தாமே பயிலப்பெறுவதுமாகும். இம்மொழியினை ஒருபுடையொப்பாகச் செவிலியெனலாம். தாய்மொழியினைத் தனிமையும், தூய்மையும், இனிமையும், மேன்மையும் எஞ்ஞான்றுங் கெடாது நின்று நிலவுமாறு நூலானும், உரையானும், நுண்மையமைய நோன்மையொடு கற்பிப்பதானும் குறிக்கொண்டு வளர்த்துக் காத்துவரும் நூலோரும், கணக்காயன்மாரும் அம்மொழிக்குத் தந்தையராவர். தாய்மொழியையும் அம்மொழியினை உயிரினும் சிறப்பாகக் காத்து வளர்த்துவரும் தலைமைசான்ற நூலாசிரியன்மாரையும் மனமார நினையாது, வாயாரப் புகழாது, தலையார வணங்காது புறக்கணிப்போரும், மன்றிற் பழிப்போரும் என்றும் செய்ந்நன்றி கொன்ற தீயரினும் தீயராவர். என்னை! மொழிவளம்படுத்தல் செய்ந்நன்றியினும் சிறந்த உய்ந்நன்றியாகும். உய்ந்நன்றி என்பது ஆருயிரின் உய்விணுக்கு முதற்காரணமாயுள்ள விழியினும் சிறந்த என்றும் அழியா மொழியினை ஈடும் எடுப்புமில்லாப் பீடுடன் நின்று நிலவச் செய்து நெஞ்சத்தூட்டும் பெரும் நன்றியாகும்.

மாந்தரையும், அம்மாந்தர் வாழ் மண்ணினையும் மாண்புடன் எண்ணி அழைப்பதும் சிறப்புச் செய்வதும் ஆய்தற்கமைந்த தாய்மொழிப் பெயரானேயாம். இம் முறைமை உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் நாடுகளுக்கும் இயைந்த தொன்றேயாம். அம்முறையில் நாம் வாழும் தொன்மையும் நன்மையும் ஒருங்கமைந்த நன்னாடு தமிழ்நாடு என்றும் நாம் தமிழ் மக்களென்றும் அழைக்கப்படுகின்றோம். இங்ஙனமே ஒவ்வொரு நாடும் மக்களும் அழைக்கப்படுகின்றனர் என்பது உலகறியுண்மையே.

உலகத்தில் ஏறத்தாழ இரண்டாயிரத் தெழுநூற்றைம்பது மொழிகள் வழங்கி வருகின்றன என்ப. இவற்றுள் நாவலந் தீவாகிய நம் பரத கண்டத்தில் மட்டும் ஒரு நூற்றெழுபத் தொன்பது பெருமொழிகளும், ஐந்நூற்று நாற்பத்து நான்கு கிளைமொழிகளும் வழங்கி வருகின்றன. மேற்கூறிய ஒருநூற் றெழுபத்தொன்பது மொழிகளுள் ஒரு நூற்றுப் பதினறு மொழிகள் நம் பாரதநாட்டின் கிழக்கோடியிலும் வடகிழக்கு எல்லையிலும் வாழும் மலைமக்கள் பேசும் திபேத்து—சீனமொழி இனத்தைச் சார்ந்த மொழிகளாம்.

இலக்கிய வளமொழிகளாக நம்பரதகண்டத்தில் விளங்கு பவை: தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, குசராத்தி, உருது, இந்தி, வங்காளம், ஒரியா, சிந்தி, பஞ்சாபி, காஃச்மீரி, நேபாலி, அசாமி, சமஃச்கிருதம் என்னும் பதினறு மொழிகள் என்ப. இவற்றுள் தமிழ் முதலான பதினைந்து மொழிகளும் உலகியல் வழக்கினும் நூல் வழக்கினும் தோன்றிய நாள்தொட்டு இன்றுகாறும் நின்று நிலவுவன. ஆனல் சமஃச் கிருதம் ஒன்று மட்டும் உலக வழக்கழிந்தொழிந்து நூல் வழக் கில் மட்டும் அடங்கியிருக்கின்றது நாடுமின்றி நாட்டஞ்சார் மக்களுமின்றி ஏட்டளவில் பூட்டப்பட்டிருக்கும் மொழியினை அவ்வளவில் இருக்கவொட்டாது இருவகை வழக்கிலும் பெரு மிதத்துடன் வாழ்ந்து எழிலுடனியங்கும் மொழிகளுள் ஒரிரு சொற்களைச் சில்லோர் தம் அறியாமையாற் புகுத்திச் செறிமகிழ் கொண்டு நெறிகோடித் திரிகின்றனர். என்னே இவர்தம் செயல் இதனல் இவர்கள் அம்மொழியினிடத்துப் பிறமொழி யாளர்கட்கு நீங்கா வெறுப்பினை நேர்விக்கின்றனர். அம் மட்டோ? தாமும் தம் தாய்மொழியினிடத்து மெய்ம்மைப் பற்றில்லாதவராகின்றனர். மேலும் தாய்மொழிப் பகைஞர் என நடுநிலை திறம்பா வடுவறு சான்றோரால் பழிக்கப்படுந் தன்மை யினைத் தமக்குத் தாமே ஆக்கிக்கொள்கின்றனர். இதனல் இவர்கள் அம்மொழிக்குச் செய்ததாகக் கருதும் சிறப்புத்தான் என்னையோ! சான்றோர் பழிக்கும் வினையினைச் செய்யலாகா தென்பதனை வரும் தமிழ்மறையா னுணர்க:

"ஈன்றாள் பசிகாண்பா ளாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை." —திருக்குறள், சுடுசு.

சான்றோன் எனக் கேட்டவிடத்து ஈன்றபொழுதிற் பெரி துவத்தல் தாயினியல்பு. அத்தகைய தாயே தன் மகன் முயற்சி யின்றி நல்கூர்வானாயின் அவனைப் பிறன்போல் மதிப்பள். இவ் வுண்மை வருமாறு:

"அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்." —திருக்குறள், ௧0௪எ.

இந்தமுறையில் தாய்மொழித்தாயும் தம்மக்கள் முயற்சியின்றிப் பிறமொழிச் சொற்களைப் பிச்சையேற்று வேண்டா வகையாகத் தன்கட் புகுத்தித் தன்னை இழிவுபடுத்திவரின் எங்ஙனம் ஆற்றுவள்? எங்ஙனம் பொறுப்பள்? பிறமொழிச் சொற்களை ஏற்பதால் தனித்தியங்கும் தன் ஆற்றல் அழியுதே என்று விழிநீருகுத்து வருந்துவள். மேலும் தாம் அருஞ் சான்றோர் தம் பெறற்கரும் பெருமுயற்சியால் பெற்று வளர்த்துப் துப் பெரும்பாடுபட்டுப் பேணிய தம் அருமை மக்களை இறப்பித் துப் பிறமக்களை வலிதிற் புகுத்திச் சுமப்பிக்கின்றனரே என்றும் நைவள். அம்மட்டோ? 'ஊரார் நாய்க்குப் பூட்டிடினும் உடையாரையே நோக்கும்' என்னும் மொழியினையும் கருதுகின்றிலரே எனக் கலங்குவள்.

மற்றொன்று: ஒரு மகன் தாயினிடத்து விலைவரம்பில்லா மணிகுயிற்றி விலங்கி வில்லுமிழும் பொற்பூணினை வேண்டு மென்றே வலுகட்டாயமாக அகற்றிவிட்டுப் பிறர்பால் பிச்சை யேற்றுக் கொணர்ந்த போலிக்கற் பதித்த மெருகிட்டு விளக்கிய பித்தளை யணியைப் பூட்டுவிப்பின் அவள் எங்ஙனம் மகிழ்வள்? மேலும் குறைவிலா நிறைவுடனிருக்கும் ஒரு தாயின் உடலுறுப் புக்களை வெட்டிச் சிதைத்து அவற்றிற்கு மாறாக மரத்தாலும் தோலினாலும் அமைத்துப் பொருத்தியணைத்து முன்னையினும் வளமுற வளர்ந்திருக்கிறது, செழித்திருக்கிறது, பொலிந்திருக் கிறது, சிறந்திருக்கிறது என்று நினைந்து பொய்ப்பால் குடித்துக் களிப்பின் அத்தாய் என் நினைப்பள்? எங்ஙனம் வாழ்வள்?

ஒருமொழியினை வளமுறச் செய்தற்கு அம்மொழியின்கண் வாய்ப்பும் ஆற்றலும் இன்றெனிற் பிறமொழியின்கண் பிச்சை ஏற்பதும் பீடுடைத்தேயாகும். தமக்கென நிலமிலாரும் களர் நிலமுடையாரும் பிறர் நிலம் பெற்றே வாழல்வேண்டும். நம் தாய்மொழியாம் தமிழ்மொழி எல்லாவளமும் ஆற்றலும் நிறை வும் உடையது. புதுக்கருத்துக்களுக்கு வேண்டும் புதிய புதிய சொற்களைப் புதுமையும் வியப்பும் பொருந்த அவ்வப்போது ஆக்கற்கு வேண்டும் அழியாவளமுடையது. இஃது இலையுதிர் வின்றிக் குலையுடன் நிற்கும் வாழைபோன்றது. தமிழ் மக்கள் சிறிது கருத்தூன்றி முயற்சி எடுத்துக்கொள்ளுதல் ஒன்றே வேண்டுவதி. எடுத்துக்காட்டாக நாம் வழங்கிவரும் உருளைக் கிழங்குக்கு அமைத்திருக்கும் பெயர் தமிழின்கண் ஆற்றலா லமைந்த பெயராகும். அங்ஙனமமைந்ததால் தமிழ் வளராது தளர்ந்து விட்டதென்று எவரேனும் கூறுவரா? அன்றிப் பிற

மொழிப் பிச்சையின்றி மடிந்துவிட்டதென்று மனங் கலங்குவரா? உருளைக்கிழங்குக்குப் பிச்சைச்சொல் பெய்திருத்தல் வேண்டுமாயின் 'பொட்டட்டோசு' என்ற (Potatoe) அயன்மொழிச் சொல்லினை மயலுறப் புகுத்தியிருத்தல்வேண்டும்.

சங்ககாலச் சான்றோர் எத்துணை விழிப்பாகத் தமிழின் கடன்படா வாழ்க்கையினையும் தனித்தியங்கும் ஆற்றலினையும் ஓம்பியுள்ளாரென்பதனை நாம் கருத்திருத்துதல் வேண்டும். எத்துணை எடுத்துக்காட்டுக்கள் காட்டல்வேண்டும் எனினும் காட்டுதல் இயலும். ஒன்றிரண்டு காட்டுதும்.

'சாம்புநதம்' என்னும் சொல்லுக்குத் திருமுருகாற்றுப் படையின்கண் வரிபதினெட்டில் "நாவலொடு பெயரியபொலம்" எனவும், 'திருதராஷ்டிரன்' என்னும் பெயர்க்கு "வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற முகத்தவன்" எனவும் வழங்கியுள்ளமை காண்க. அவர்தம் மரபினராகிய நாம் அவர் போன்று கருத்துடனும் விழிப்புடனும் வாழாது பிச்சையெடுக்குங் கொச்சையராக வாழ்தல் அறிவும் ஆற்றலும் செறிந்த நல்லோர் எனப் பெயர்பெறவோ? அல்லோரெனப்பெயர் பெறவோ? அறிந்து கூறுமின். இவற்றை மனங்கொளாது வாய்க்கு வந்தவாறு பேசுவதும், எழுதுவதும் மேற்கொண்டால் "நலத்தின்கண் நாரின்மை தோன்றுத"லாகாதா? எம்முறையாக அயன் மொழிச் சொற்கள் புகுந்தன என்பதைக் காண்பாம்: சங்க இலக்கியத்தின்கண் நூற்றுக்கு இரண்டு விழுக்காடும், கீழ்க் கணக்கு, சிலப்பதிகாரங்களில் நூற்றுக்கு நான்கும், ஒன்பதாம் நூற்றாண்டுவரை வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த நாயன்மார் ஆழ்வாராதிகள் அருளிச்செய்த நூல்களில் நூற்றுக்குப் பதினைந்துமாகக் காணப்படுகின்றன என்ப.

கி. பி. பத்தாம் நூற்றாண்டு தொடங்கிச் சமணர்களால் புகுத்தப்பெற்ற மணிப்பிரவாளம் என்னும் போலிப் பொய்ப் புனைவால் வரைதொகையின்றிப் புகுவவாயின. கி. பி. பதினொன்கில் வில்லிபுத்தூராரும், கி. பி. பதினைந்தில் அருணகிரியாரும், பின்னுள்ளாரும் நனிமிகப் புகுத்தினர். அயன்மொழியாகிய சமஃச்கிருதம் புகுந்த வழிகளையுன்னின், க. பிராகிருதம் பேசும் வடநாட்டு மக்களுடன் நேரே பேசிப் பழகிய தமிழ்மக்கள் கடன் வாங்கினவை, உ. வடமொழிகற்ற வடநாட்டு அறிஞர்களால் தமிழ் நூலின்கண் புகுத்தப்பெற்றமை, ந. வடமொழி கற்ற தமிழறிஞர்கள் புகுத்தியவை, ச. மணிப்பிரவாளமென்னும் மொழிநடை விழைந்த களிஞரால் புகுத்தப்பட்டவை எனப் பகுக்கலாம். இம்முறையானே புகுந்த அயன்மொழிச் சொற்க

ளால் தூய தமிழ்மொழி அழிந்து அடங்கியொழியுமோ என்னும் ஐயம் நல்லார் பல்லோருள்ளத்தும் தோன்றும் நிலை ஏற்பட்டது. மேலும் அயன்மொழி மயலாலும் ஆய்வின்மையாலும், தனித் தமிழ்ப் பற்றுக்கோடல் தம் தலைக்கடன் என்னும் மெய்ம்மை யினை நாடாமையாலும் "ஒன்றேயாயினும் தனித்தமிழுண்டோ" என்னும் ஒவ்வாவுரையும் உலவத் தொடங்கிற்று. அம்மட்டோ? தூய தனித்தமிழ்ச்சொற்களையும் சேய அயன்மொழிச் சொற்க ளாக மயல் கொண்டு வழக்கிடுவாருமாயினர். அத்தகைய சொற் களுள் சில வருமாறு: காலம், உலகம், முத்து, மீன், நீர், குடி, ஆணி முதலியன.

தமிழரால்—தமிழ் கற்றேமென்று அயன்மொழி மயலாம் தருக்கினரால் தமிழ் வடமொழியினின்றும் பிறந்ததெனவாய் கூசாது பேசவும், கைசலியாது எழுதவும் ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில் மேலைநாட்டறிஞர், பன்மொழிப்புலவர், அம் மொழிகளை ஒப்பு நோக்கி நடுநின்று உண்மைகாணும் வேட்கை யொன்றே குறிக்கோளாகக்கொண்டு உள்ளவாறும் வடுவறு காட்சியர், ஆகிய டாக்டர் கால்டுவெல், போப் முதலிய துரை மக்கள் தமிழின் ஏற்றத்தையும், தனித்தியங்கும் ஆற்றலினையும், தொன்மையினையும், உயிர்ப்புச்செட்டாம் நன்மையினையும், இயற்கை, எளிமை, இனிமை, தெளிவு முதலிய மேன்மையினை யும் மேலும் மேலும் வலியுறுத்து வரைந்து நிறுத்துவாராயினர். ஒரு சொல்லைத் தூய தனித்தமிழ்ச் சொல்லென்று உறுதி கொள்ளற்காம் வாயில்களாய் டாக்டர் கால்டுவெல் ஒப்பியல் இலக்கணத்திற் கண்டபடி வருமாறு: க. ஒரு சொல் மட்டும் அடிச்சொல்லும் இனமான சொல்லும், அதிலிருந்து தோன்றி வளர்ந்த சொல்லும் இல்லாமலிருக்க, அதற்கினமான, அதி லிருந்துண்டான சொற்கள் தமிழ், தெலுங்கு, கன்னட முதலான திராவிடமொழிகளில் காணப்படின் அதனைத் தமிழ்ச்சொல் அல்லது திராவிடச்சொல் எனக்கோடல். உ. ஒரு சொல்லின் பொருளை உணர்த்த வேறு பல சொற்கள் வடமொழியிலிருக்க அப்பொருளுக்குரிய சொல்லொன்றுமே தமிழ் முதலிய திராவிட மொழிகளில் காணப்படுமானால் அதனையும், ௩. ஒரு சொல் வடமொழியில் மட்டும் காணப்பட்டு, அம்மொழிக்கினமான கிரேக்கம், இலத்தீன், செர்மன் முதலிய ஆரிய மொழிகளில் காணப்படவில்லையானாலும் அச்சொல் திராவிடமொழிகளிலெல் லாம் வழங்குமானாலும் அச்சொல்லையும், ச. ஒரு சொல்லின் பிறப்பைப்பற்றி வடநூலார் கூறுவது நம்ப முடியாததாயும், வேடிக்கையாயும் இருக்க, தமிழ்நூலார் கூறுவது பொருத்த மாயின் அச்சொல்லையும், ரு. ஒரு சொல் திராவிட மொழிகளில் தக்கதாகவும், அடிச்சொல்லுடன் தொடர்புடையதாயும் அமைய

வடமொழிக்கண் அங்ஙனம் அமையாவிட்டால் அச்சொல்லையும், சூ. வடமொழியில் பெருமதிப்புள்ள திராவிடமொழிப் புலவர்கள் ஒரு சொல்லைத் தமிழ்ச்சொல் அல்லது திராவிடச்சொல் என்று கூறினால் அச்சொல்லையும் தமிழ்ச்சொற்கள் அல்லது திராவிடச் சொற்களென்று கோடற்கு எட்டுணையும் ஐயமின்றென்பதேயாம்.

கடைக் காலத்தில் தூய தமிழின்கண் அயன்மொழிக் கலப்புமிக்கு அழகிய முகத்தில் அருவருப்பினைத் தரும் அம்மைத் தழும்புபோன்றும், நிலவொளிகாலும் முழுமதியின்கண் கரும் பாம்பு பற்றும் மறுக்கம்போன்றும் மங்கா மாசு தங்குவவாயின. அவற்றைக் கண்டு ஆற்ருெணு அல்லலுற்றழுங்கிய மெய்ம்மைத் தமிழ்ச் சான்ருேர்கள் சிலராவர். அவருள் தலையாயவரும் தம் பெயரையே 'மறைமலையடிகள்' என மாற்றி வழங்குவித்து ஏனையார்க்குத் தனித்தமிழ் மாண்பினைக் கட்டுறுத்தி யோம்புமாறு வழிகாட்டியவரும் ஆசிரியர் மறைமலையடிகளாராவர். அவர்களின் செய்யுள் நூல், உரைநடை நூல் முதலியவற்றை நன்கு பயின்றவர்கள் செந்தமிழின் சீரிய தன்மையினையும், தனித்தியங்கும் ஆற்றலினையும், இயற்கை இனிமையினையும், உளங்கவர் வனப்பினையும் செவ்விதினுணர்ந்து உவகை மிக்குக் கைக்கொள்வர். ஆழ்கடல் முத்து வருந்திப் பெறுவது; வனப்பு மிக்கது; வாழ்வு தருவது; மதிப்புப்பெறுவது. போலி முத்தினுக்கு இவை ஏதுமின்று ஒன்றினை அணிபெறச் செய்வதே செம்மைப் பணியாகும். ஊக்கமில்லார் எங்ஙனம் ஆக்கமெய்துவர்? முயற்சியன்ருே திருவினையாக்கும்! முயலாது வைத்துத் தனித்தியங்கும் தமிழின் சிறப்பாற்றலைக் கெடுத்துக் கலப்பு வேண்டாக் கன்னித்தமிழின்கண் மனம்போனவாறு கலந்து இனத்தைக் கெடுக்க எண்ணுவது எங்ஙனம் ஏற்புடைத்தாகும்?

ஒவ்வொருவரும் தம் தாய்மொழிப் பற்றுடன் இருப்பதற்கு மாருகச் சிலர் அப்பற்றின்றி நுனிப்புல் மேய்வார் போன்று தம்மைத்தாமே பெரிதுங் கற்றவராகத் தருக்கித் தம் புல்லிய தமிழே நல்லியற்றமிழ் என நினைந்து நல்லியற்றமிழினை உயிரினும் சிறப்பாக நாளும் ஓம்பிய தமிழ்ப்பெருஞ் சான்ருேர்களையும், அவர்தம் விலைவரம்பில்லாச் சீரிய நூல்களையும் எண்ணிப் பாராது பழித்துத் திரிவாரும் உளர். அவர்தம் புன்செயல் அவர்க்கே நீங்காப் பழியினையும் தாங்காத் துன்பினையும் தலைத் தலைத்தருவதாகும்.

இந்த நிலை எதிர்பாராத வேண்டத்தகாத முறையில் "தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்" ஏழாவது மாநாட்டு இரண்டாவது நாள் கூட்டத்தில் ஒருவரால் நேர்ந்தமைக்கு நனிமிக வருந்துகின்ருேம். கூட்டம் 2-8-'59-இல் நிகழ்ந்தது. அக்கூட்டத்திற்கு டாக்டர்

அ. சிதம்பரநாதன் செட்டியாரவர்கள் தலைமை பூண்டார்கள். அக்கூட்டத்தில் திரு. ரா. தேசிகன் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ வாய் சோர்ந்து 'மறைமலை தமிழ் தமிழாகுமா? உரைநடை யொன்றும் புரியவில்லையே, பிறமொழிக் கலப்பில்லாத் தமிழ் சிறக்குமா?' என்றெல்லாம் பேசுவாராயினர்.

அதனை மறுத்துத் தலைமைபூண்ட திரு. செட்டியாரவர்களே உணர்ச்சி ததும்ப உரை நிகழ்த்தியுள்ளார்கள். அவர்கள் கூறிய கழற்றுரை, 'மறைமலையடிகளாரையும் அவர்தம் மாண்புமிக்க தேனினுமினிய உரைநடையினையும் இழித்தும் பழித்துந் தூற்றுவாரும் தமிழகத்திலிருக்கின்றனரா! தமிழ் நாடும் இடங்கொடுத்திருக்கிறதே! எழுத்தாளர் சங்கத் தொடர்பும் ஏற்பட்டிருக்கின்றதே!' என்பனவாகும். 'இந்நிலையில் எழுத்தாளர் சங்கம் இயங்குமாயின் உண்மைத் தமிழாசிரியன்மார் அச்சங்கத்தினின்று விலக நேரிடு'மெனவும் கூறினர். இதனையடுத்துத் திருவாளர்கள் கா. அப்பாத்துரையவர்களும், ம. பொ. சி. அவர்களும் வன்மையாகக் கண்டித்தனர். இறுதியில் அச்சங்கத்தின் நிலைத்தலைவரும் மாநாட்டுத் தலைவரும் ஆகிய திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்களும் கழறிக் கூறியதுடன் இவை தனிப்பட்டவர்களின் கருத்தென்றுஞ் சாற்றினர்.

'தமிழ் நாடு, நவஇந்தியா, தினத்தந்தி' முதலிய நாளிதழ்களும் 'செல்வி' முதலிய திங்களிதழ்களும் தனிப்பட்ட கழகங்களும், அறிஞர்களும், அன்பர்களும் வன்மையாகக் கண்டித்து வரைந்தும், தீர்மானங்கள் செய்து வெளிப்படுத்தியும் கழறியுள்ளன. கழறுதல் - எச்சரித்தல்.

இதுபற்றிச் சென்ற 'செல்வி'யில் குறிப்பிட்டுள்ளோம். இச்செல்வியிலும் "மறைமலையடிகளார் மாண்பு" என்னும் தலைப்பில் செட்டிநாடு வேகுப்பட்டி சை. சி. நூ ப. கழகமும், தாராபுரம் பெரிய கடைவீதி 'விவேகானந்த சபை' "தீர்மானங்கள்" என்னும் தலைப்பிலுமாக இருபெரும் கட்டுரைகள் வெளிவருகின்றன. இவற்றால் யாமும் இம்மட்டில் நிறுத்துகின்றோம்.

இத்தகைய சிறுசிறு தூறல்கள் இடையிடையே வருவன தனித்தமிழ் ஆர்வத்தினரைத் தட்டியெழுப்பி ஊக்குவிப்பதும், உண்மைத் தமிழர் எவர் எவரென்பதை எடுத்துக்காட்டுவதும் செய்வ ஆகும். பைங்கூழினுக்குக் களை தோன்றுவது போன்று பைந்தமிழினுக்குக் கலப்பு வேண்டுமென்னும் கருத்துடையாருமாவர். பைங்கூழ்க்காவலன் களைகண்டஞ்சான். களைகட்டோம்ப எஞ்சான். 'கேட்டினுமுண்டோருறுதி'யென்னும் நாட்டியல் மொழியினையும் நன்குணர்வான்.

---

*திருமணத் திருவாழ்த்து

மணமகன் :
நிறைநாட்செல்வன்
முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,

மணமகள் :
நிறைநாட்செல்வி
வயிரமணியம்மை

தென்னகத்துத் திலகங்காள் !

ஓர் ஆயிரத்தி ஒரு நூற்றுமுப்பத்து நான்காமாண்டு ஆனித் திங்களில் அருமையுட னழைக்கின்ற பொன்னுளாம் புதன்நல் நாளில்தேதி பத்ததிலே, நீங்கள் திருவருட்டிறத்தால் புத்துலகச் சிற்பிகளாய்ப் பொலிவுற விளங்கத் திருத்தலமாம் திருப் பரங்குன்றத்தில் திருவேளருளால் திருமணம் நடக்கும் அன்று நாம் அவனருளாலுரைத்ததே என்பது நுங்களின் நலனுக்கே.

வெற்றிகொண்ட விரரே!

நும்தம் கருத்திற்கோ ரியைந்த கருவிழியாள் (காதிலே போடுகின்ற உயர்தரத்து இனமாம் வைரம் என்பது, உருக்கிக் கொண்டு தங்கத்தை எடுத்துவிடலாம், வைரத்தைத் தனியாகப் பிரிக்க இயலாது என்ற கருத்துத் தாமறிந்ததே.) தாம் எம் மங்கையர்க்கரசியின் அருந்தவச் செல்வியாம், வைரமணியாம் எங்கள் குலவழிக்கொடியுடன் கூடிவாழ்ந்து செயற்கரிய செயற் பல செய்து செம்மையுடன் சிறக்கவாழ எம் அண்ணலாம் ஆனந்தக் கூத்தனின் அருள் என்றுமே அவன் திறத்தாலுண்டு. செல்வியின் செம்மையறிந்து தாம் எம்மங்கையர்க்கரசி தன் குலக்கொடியாள் வைரமணி தன் இயற்கைக்கேற்ற குணுள னென்றறிந்துதாம், கன்னியை உமக்குக் கைப்பிடித்துத் தரு கின்றேம். செல்வியவள் தம்மோடு தாமியைந்து இல்லறம் இனிது நடாத்திச் செல்வங்களை உலகுக்கீந்து உறுதியுடன் உற்ற தோர் துணையாய்ச் செம்மையுடன் சிறக்க வாழவே, எம்தம் அருட்கடலைப் பாமாலையாற் பன்முறை வணங்குகிறேன்.

தொல்லுலகிற் றெளிக்கின்ற வைரமே!

நீ என்றுமே எம்தம் குலத்திற்கோர் நல்விளக்காய் நானிலத் தில் நாதனுடன் நாட்டோர் நாண, நல்லறமாம் இல்லறத்தை

* திருமணத்திற்கு முந்தியநாள், 1945-ல் காலஞ்சென்ற மறைமலை யடிகளார் மகளார் திருவரங்க நீலாம்பிகையம்மையார் ஆவியுலகினின்று நெல்லையிலுள்ள ஆவியுலகத் தொடர்பாளர் ஒருவர் வாயிலாக உணர்த்தி எழுதச்செய்து (Auto writing) அனுப்பியதாகும்.

நலமுறவே நடத்தி மாண்புறு மக்கட்பேறு பெற்றுப் பெரு வாழ்வு வாழுவே எம்தம் கருத்தே. செல்வியே, நீ செல்வனின் நலன்பேணி நாக்குக்கு உருசியும், வயிற்றிற்கு வளமுமுற உணவு சமைத்தும், களைத்து வரும் கணவனின் கருத்தறிந்து உபசரித்துக் களைப்பதைப் போக்கியும் கருத்திற்கோ ரின்னிசையாய் உன் நாதம் அவர்தம் செவியிலுறச் சீர்கொண்ட செல்வியாய், அவர்தம் நலனே உன் நலனென்றிதயத்திடம் பெற்று நீ நற்பெயரை எடுக்கவே எங்கள் விருப்பமென்பதை உனக்கு எடுத்துரைக்கின்றேன்.

செல்வரிற் சிறந்தவரே!

செல்வியவள் தன் நிழலே உம்தம் இதயத்து நிழல்பெற்று, அன்புடன் அவளை ஆதரித்து, நல்லறமாம் இல்லறத்தை நலனுடன் நடத்தினுல் என்றுமே உம்தமக்கு ஓர் உயரிடமுண்டு என்பது என்போன்ற பெண் எடுத்துரைக்கத் தேவையில்லை. இருப்பினும் எமக்குமோர் கடமையுண்டு என்பதும், தாமறிந்ததே. செல்வியின் செம்மையறிந்து அதற்கேற்பச் செல்வியின் கருத்துச் சரியானல் ஏற்றும், இல்லையேல் எடுத்துரைத்தும், இல்லறத்தை நல்லறமா இயக்கும் தன்மை ஆண் மகனுக்கே என்பதை நான் எடுத்துச் சொல்லித் தாம் எம்மைக் குறைகூற நான் விரும்பவில்லை. எனினும் எம்தம் கருத்தை எடுத்துரைக்கும் உரிமை எனக்குண்டு. தாமென்றுமே தம் இல்வாழ்க்கைத் துணைவியாம் எங்கள் குலக்கொடி வைரமணியுடன் வையத்தியைந்து வாழ அம்மை பங்கனைப் பணிவுடன் இறைஞ்சுவேன்.

மங்கைதன்னில் மாணிக்கமே!

வைரமணியென்று உனக்கு நாங்கள் பெயரிட்டதற்கிணங்க, நீ என்றுமே, எங்கள் குலத்திற்கோர் இல்விளக்காயும், வையத்திற்கோர் வைரமாயும், நீ உன் நாதனுடன் இயைந்து நல்லறமாம் இல்லறத்தை அன்புடன் நடத்தி வெளிச் சொல்லுக்குச் செவி சாய்க்காது வீண் சந்தேகத்திற்கு இடம் கொடாது, கணவனே கண்கண்ட தெய்வமென்ற கருத்துத்தான் உன்னிதயத் தெழவேண்டும்; நிலைபெறவேண்டுமென்பதே என் கருத்து.

தொன்மைகொண்ட தென்நாட்டுத் திலகங்காள்!

தங்களுக்கு என்னுலியன்றளவு எடுத்தியம்பினேன். நீங்கள் செல்வரும் செல்வியும் இயைந்து செவ்வனே நல்லறமாம் இல்லறத்தை நடாத்தி, வரும்விருந்துபசரித்தும், இன்சொல்லே என்றும் உங்களிதயத்தெழும் குரலும், தங்களகமதிலே அகமென்ற அரக்கனுக் கிடங்கொடாதும் கற்பெனப்படுவது இரு

சாரார்க்கும் இயைந்ததே என்ற தங்களின் இதயத்திலோரூற்று என்றுமே சுரந்தும் பொறுமையென்ற சிறந்த அணிகளை அணிந்தும், நாட்டிற்கு எடுத்துக்காட்டாய்த் திறம்பட வாழவே எம்தம் கருத்து என்பது மீண்டும் அறிவிக்கிறேன்.

திருமணத் தம்பதிகாள்!

நீங்கள் எல்லா நலனுமுற நான் திருப்பரங்குன்றத்தமர்ந்துறையும், தெய்வயானை அம்மையை ஆட்கொண்ட அருட் பெருங்கடலாம் திருவருளை இன்முகத்தான் இறைஞ்சி வேண்டுகிறேன். திருவருள் திறத்தால் நீங்கள் நெடுங்காலம் அன்புடன் நகமும் சதையதுபோல் நீங்காது நெறி தவறாது, எஞ்ஞான்றும் அவன் சிந்தையே தங்கள் கருத்திலோடத் தென்னகத்துத் திலகங்களாய் வாழ எம்மங்கையற்கண்ணிபங்கனும் அருளுடை அண்ணலாம் ஆனந்தக்கூத்தனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

இப்படிக்கு,

திருநெல்வேலி,
23-6-1959

தும்தம் உறவால் உந்தப்பட்ட மங்கை
நீலாம்பிகை, திருவரங்கம் பிள்ளை இல்லறக்கிழத்தி,
ஆவி உலகவாசி.

மறைமலை அடிகளார் மாண்பு

[திரு. ஆ. பழ. குமரப்பன்]

தோற்றுவாய்: தமிழ் எழுத்தாளர் சங்க விழாவில், வடமொழித் தமிழ் எழுத்தாளராகிய, ரா. ஸ்ரீ தேசிகன் என்பவர், "தமிழ் மொழியில் பிற மொழி கலக்கப்படலாமா" என்னும் தலைப்பில் பேசும்பொழுது, தமிழ்க் கடலாகிய, மறைத்திரு மறைமலையடிகளாரைப் பற்றியும் அடிகளாரின் உரைநடையைப் பற்றியும், தமிழ் அறியா "மேதை" பழித்துப் பேசியதை அறிந்ததும் இக் கட்டுரை தோன்றுவதாயிற்று.

தமிழின் பெயரில் சங்கம் வைத்துக்கொண்டு தமிழையும் தமிழ் அறிஞர்களையும் பழித்துப் பேசுவதை எந்தத் தன்மானத் தமிழனும் பொறுத்துக்கொண்டிரான். வடமொழி எழுத்தாளர் சங்கம் என்று ஒன்று வைத்துக்கொண்டு, அம் மொழியை வளர்ப்பதில் நமக்கு எவ்வித மறுப்புமில்லை. தமிழின் பெயரைச் சொல்லித் தமிழகத்தில் வாழ்ந்தும், பிழைத்தும் வருகின்ற ஒரு கும்பல் தமிழ்க் கடலாகிய மறைமலையடிகளாரைப் பழித்துக்

கூறியதைப் பற்றித் தமிழ்ப்புலவர் குழு தக்க நடவடிக்கை எடுக்காது வாளாவிருப்பதேன்?

மறைத்திரு மறைமலையடிகளார், தனித்தமிழ் வளர்ச்சிக்குப் பல்லாண்டு காலமாக அரும்பாடுபட்டு, (பெற்று) அரிய கருத்துக் களைத் தமிழகத்திற்கு வழங்கியிருப்பதை எவரும் மறுக்க முடியாது. அடிகளாரின்றேல் தனித்தமிழ் வளர்ச்சியடைய முடியுமா? செத்த மொழியை அரியணையில் ஏற்றி மகிழத் தமிழகந்தான் கிடைத்ததா? ஞாயிற்றைப் பார்த்து நாய் குரைப்பது போல இருக்கிறது—அறிவுக் கடலை—தமிழ்க் கடலைப் பழிப்பது.

முத்தமிழ்க் காவலரால் துவக்கப் பெற்ற, புலவர் குழு உடனே கூடித் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இனியும் வாளாவிருந்தால், "அவ் வடமொழி விரும்பிகள்" தமிழை அழித்தே தீருவர். டாக்டர். சிதம்பரநாதச் செட்டியாரவர்கள், தக்க பொழுதில் அக் கூட்டத்திலேயே கண்டித்துப் பேசியதைப் பாராட்டுகின்றேன். தேசிகன் பேசியதால், அடிகளாரின் மாண்பு சிறிதுங் குன்றாது. "அரைக்கினும் சந்தனம் தன் மணங் குன்றாது" என்பதுபோல், மேன்மேலும் மாண்பும் புகழும் குன்றாது வளரும் என்பது ஒருதலை.

சோறு, நீர், திரு, மொழி, ஒளி, சொற்பொழிவு, வணக்கம், வெளியீடு, வெற்றி, குடிமதிப்பு, ஆண், பெண், குடிகள், பெரும் பேராசிரியர், முழுநிலா, திருமணம், உரைநடை, ஆறு, புதல்வன், புதல்வி, ஆண்டு, வானொலி, கடல், சிற்றூர்-போன்ற எண்ணிறந்த தமிழ்ச் சொற்கள் மறைவுற்றன. அடிகளார் போன்ற தமிழ்ப் பேரறிஞர்கள் அல்லும் பகலும் பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து, மீண்டும் மேற்கண்ட சொற்களை வழக்கிற்குக் கொண்டு வந்தனர். முறையே:—சாதம், ஜலம், ஸ்ரீ, பாஷை, பிரகாசம், பிரசங்கம், நமஸ்காரம், பிரசுரம், ஜயம், ஜனசங்கியை, புருஷர், ஸ்திரீ, பிரஜை, மஹாமஹோபாத்தியாயர், பௌரணை, விவாகம், வசனம், நதி, புத்திரன், புத்திரி (குமாரன், குமாரத்தி) வருஷம், ஆகாசவாணி, சமுத்திரம், கிராமம் போன்ற எண்ணிறந்த வடசொற்கள் பாலில் நஞ்சு கலந்ததற்கொப்ப, நம் அருந்தமிழில் வந்து கலந்து தூய தமிழ்ச் சொற்களை மறைத்து விட்டன. சென்னை நகராட்சி மன்றத்தினர், "ஸ்ரீ" என்ற வட சொல்லுக்குப் பதில் 'திரு' என்ற தூய சொல்லைத்தான் பயன் படுத்தவேண்டுமென்று கட்டளை பிறப்பித்து வழக்கிலும் கொண்டுவந்திருக்கின்றனர். அவர்களின் தமிழ்ப்பற்றுக்குத் தமிழ்க் கடலாகிய மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் வளர்ச்சியேயாகும்.

---

*தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்

வாழ்க்கையில் இருள் சூழ்ந்த நிலையிலிருந்து வியக்கத்தக்க ஒளி பொருந்திய உயர் நிலையும் புகழும் பெற்றுயர்ந்தவர் ஆபிரகாம் பண்டிதர். இஃது அவரது தொழில் அவருக்களித்த சீரிய சிறப்பாகும். ஒரு துவக்கப்பள்ளி ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினர் பண்டிதர். பின்னர் மருத்துவத் தொழில் மூலம் திரண்ட செல்வத்தையும், பயிர்த்தொழில் மூலம் பெருமதிப்பையும் பெற்ருர். நிழற்படம் பிடித்தல், வண்ண ஒவியம் தீட்டுதல், சோப்புச் செய்தல் போன்ற சிறு கைத்தொழில்களிலும் ஈடுபட்டார். பொறியியற் றுறையிலும் பயிற்சி பெற்ருர். கர்னடக இசைத்துறையில் பயனுள்ள ஆராய்ச்சிகளைச் செய்தார். இதனல் தமிழ் இசை மறுமலர்ச்சி வரலாற்றில் நீங்காத இடமும் முதன்மையும் பெற்ருர்.

பண்டிதர் 1859 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 2 ஆம் நாள், குற்ருலத்திற்கு அண்மையில் உள்ள சாம்பூர்வடகரை என்னுமிடத்தில் பிறந்தார். இவருடைய பாட்டனர் சுப்பிரமணிய நாடார் என்பவர். ஒரு தோட்டமும் ஒரு சிறு கிணறுமே அவருடைய உடைமைகள். அவருக்குப் பதின்மூன்று மக்கள் இருந்தனர். தீயூழின் பயனக அவர்களுள் பதினெருவர் இறக்க, இருமக்களே எஞ்சி நின்றனர். இதனல் அவர் மன அமைதி நாடி கிறித்துவ சமயத்தில் சேர்ந்தார்.

ஆபிரகாம் பண்டிதரின் தந்தையார் முத்துச்சாமி என்பவர் ஒரு தோட்டத் தொழிலாளியாகவும், அன்னையார் அன்னம்மாள் ஒரு விவிலிய போதகப் பெண்ணுகவும் பணியாற்றினர். பண்டிதர் தமது 12 ஆம் அகவை நிறையுமுன்பே துவக்கக் கல்வியில் தேர்ச்சிபெற்று ஒரு பள்ளி ஆசிரியராக அமர்ந்தார். ஆனல் ஆசிரியத் தகுதிபெற 150 கல் தொலை நடந்து சென்று, திண்டுக்கல்லில் 1874 ஆம் ஆண்டில் ஒரு பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்துத் தேர்ச்சிபெற்று அங்கொரு பள்ளியில் ஆசிரியரானர். அங்கிருந்தகாலை கருணுநந்தர் என்னும் சித்த மருத்துவரிடம் தொடர்பு கொண்டார். கருணுநந்தர் 'கருணுநந்தர் சஞ்சீவி மருந்துகள்' என்று தம்முடைய பெயரில் மருந்துகளைச் செய்ய இவருக்குக் கற்றுக்கொடுத்தார்.

---

* இக் கட்டுரை ஆகஸ்டுத் திங்கள் 23 ஆம் நாள் வெளியான 'இந்து' (The Hindu) இதழில் திரு. A. C. பால் நாடார் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

இவருக்கு 1882 ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. பின்னர், திண்டுக்கல் பள்ளிக்கூடம் கலைக்கப்பட்ட காரணத்தால் இவரும் இவர்தம் மனைவியாரும் வாழ்க்கைக்கு வழிதேடும் பொருட்டு, தஞ்சையில் குடியேறினர்.

தஞ்சையில் கோட்டைப் பகுதியில் உள்ள லேடி நேப்பியர் பெண்கள் பள்ளியில் இவரும் இவர்தம் மனைவியாரும் வேலைக் கமர்ந்தனர். அங்கிருந்த காலை ஒருபுறம் சங்கீத மகாலிலிருந்தும் மற்றொருபுறம் இராமர் கோவிலிலிருந்தும் நல்ல இசைகளைக் கேட்கும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது. அங்கு இவருக்கு ஒரு பார்ப்பனர் நண்பரானார். அவர் இவருக்கு வேதாந்தக் கருத்துக்களைப் போதித்தார். பண்டிதர் மருத்துவக்கலை பயிலுதலையும், மருந்துகளைச் செய்தலையும் தொடர்ந்து மேற்கொண்டார். மருத்துவப் பணியிலேயே தம்முடைய முழுநேரத்தையும் செலவிட எண்ணி இவரும் இவர் மனைவியும் பள்ளிக்கூடப் பணியைவிட்டு விலகினர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தவண்ணம் அத்தொழிலுக்கு வேண்டிய வசதிகள் போதிய அளவு கிடைக்காமையால் இரண்டு ஆண்டுகள் வறுமையால் வாடினர்.

பின்னர்ச் சிறிதுசிறிதாக நல்லூழ் வந்துற இவர்கள் தொழில் வளம்பெறலாயிற்று. நிலமும் வீடும் வாங்கினர். அந்த வீடு தான் பின்னர் 'கருணாநந்தர் மருத்துவமனை' ஆயிற்று. வயது முதிர்ந்த தம் பெற்றோரைத் தம்மிடமே அழைத்துக்கொண்டார். அங்ஙனமே உடன்பிறந்தோரையும், ஏழை உறவினரையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு அவர்கட்கெல்லாம் வேலை கொடுத்து ஆதரவு தந்தார்.

பிறகு பண்டிதர் தம் நாட்டத்தைப் பயிர்த் தொழில்பக்கம் திருப்பினர். தஞ்சை நகர்க்கு வெளியில் ஒரு நிலம் வாங்கி அதற்குக் 'கருணாநந்தர் பண்ணை' என்று பெயரிட்டார். அந்நாளில் சென்னை ஆளுநராக இருந்த சர். ஆர்தர் லாவி என்பார் இப்பண்ணைக்கு வருகைதந்த காலை, "இப்பண்ணை பயிர்த் தொழில் துறையில் அறிவு ஆற்றல் நன்முயற்சி ஆகியவற்றுக்கு ஒரு நிலைத்த நினைவுச்சின்னமாகக் காட்சியளிக்கின்றது. இஃது இந்திய நாட்டில் நான் பெற்ற அனுபவத்தில் தலைசிறந்ததாகும்," என்று கூறிப் போந்தார்.

பண்டிதரின் பண்ணையில் பலவகைக் கனிமரங்களும், ஆங்கிலநாட்டுக் காய்கறிகளும் பயிரிடப்பட்டன. அவர் புதுமுறையான கரும்பு பயிரிடும் முறையைக் கண்டுபிடித்தார். அது 'நியூ ஸ்போர்ட்' என்று அழைக்கப்பட்டது. பால் பண்ணை, கோழிப்பண்ணை முதலியவற்றையும் அவர் நடத்தினர். சோளம்,

கரும்பு, பருத்தி, நிலக்கடலை முதலியவற்றைப் பயிர் செய்வது எப்படி என்பது பற்றி ஒரு சிறு வெளியீடு அச்சிட்டுக் குடியானவர்களுக்கு வழங்கினர்.

1911 இல் 'லாலி மின்விசை அச்சகம்' என்னும் ஓர் அச்சகத்தை நிறுவி, அதில் அச்சடித்தல், நூற்கட்டடம் செய்தல் முதலிய வேலைகளைப் புதுமுறையில் செய்து வந்தார்.

பண்டிதர் இசையிலே ஆர்வம் மிகக்கொண்டவர். இந்திய இசைக்கும் மேனாட்டு இசைக்கும் இடையேயுள்ள வேற்றுமையைக் குறைத்து இரண்டையும் இணைக்கும் முறை யாதென ஆராயலானர். அந்நாளில் தஞ்சையில் பிச்சைமுத்து என்பார் மேனாட்டு இசையில் வல்லுநராக இருந்தார். அவரும் இவரும் கூடி ஆராய்ந்து சில இந்திய இராகங்களை ஒழுங்குபடுத்தினர். இதனைக் காயகசிகாமணி முத்தையா பாகவதர் பெரிதும் பாராட்டினர்.

தெலுங்கில் தியாகராய கீர்த்தனங்களில் உள்ள கருத்துக்களுக்கு நேர் தமிழ்க்கருத்துக்களை அமைத்துப் பண்டிதர் தமிழில் பாடல்களை அமைத்தார். தாமோ அல்லது தம்முடைய மாணவர் எவரேனுமோ தமிழிலேயே அத்தகைய கீர்த்தனங்கள் அமைக்கும் நாள் எந்நாள் என அவர் பேரவாக் கொண்டிருந்தார்.

தம்முடைய மக்களுக்கு வீணை, பிடில் முதலிய இசைக் கருவிகளைப் பயிற்றுவிக்கத் திறமைமிக்க ஆசிரியர்களை அவர் அமர்த்தியிருந்தார். முத்தையா பாகவதர், மைசூர் வைணிக சேஷண்ணா, விசயநகர சமத்தான வைணிக சிரோமணி வெங்கட்ராமதாஸ் ஆகியோருடன் இவர் நெருங்கிப் பழகி, உரையாடி, வினக்களை எழுப்பிக் கர்னடக இசை என்பது யாது?—அதன் தோற்றம்—சுரங்களிலிருந்து சுருதிகள் அமைவது எங்ஙனம்? இராகங்களின் அமைப்பு—இன்ன பிற செய்திகளை அறிய முயன்றார்.

கீர்த்தனங்கள் கீதங்கள் முதலியவற்றை அமைக்கப் புது முறைகளைக் கண்டுபிடித்தார். தம் மகள் திருமதி ஞானசிகாமணி, இரண்டாம் மனைவி பாக்கியம்மாள் ஆகியவர்களின் துணைகொண்டு புதுமுறையில் பல பாடல்களை அமைத்தார். சேஷண்ணா, முத்தையா பாகவதர், இசை இதழ் ஆசிரியராயிருந்த எச். பி. கிருட்டிண ராவ் ஆகியோர் அவற்றைத் தடையின்றி ஏற்றுக்கொண்டனர்.

வடநாட்டு இசை மாணவர்களுடன் பண்டிதர் தொடர்பு கொண்டார். 1916 இல் பரோடாவில் நடைபெற்ற அனைத்

திந்திய இசை மாநாட்டில் கலந்துகொண்டார். சுருதிகள் 22 என்பது தவறு என்றும் மொத்த சுருதிகள் 24 என்றும் அவர் ஆராய்ச்சிமுறைப்படி நிறுவிக் காட்டினார். புகழ்பெற்ற கர்னாடக இசைவாணர்கள் அக் கருத்தினை ஏற்றுக்கொண்டனர். 'ஸ்தாய்' என்பது 24 சுருதிகளாகப் பிரிக்கப்படுவன என்றும், அவை இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு 12 கூறுகள் இன்று வழக்கி லுள்ளன என்றும் எஞ்சியவை ஒன்றுக்கொன்று பங்கிட்டுக் கொண்டு ஒத்து வருவன என்றும் நிலைநாட்டினார்.

பண்டிதர் தாமே ஒரு வீணையைத் தயாரித்து அதில் அவர் கண்டு பிடித்த சுருதி முறைகளை இயக்கிக் காட்டினார். மரகத வல்லி துரைப்பாண்டியன், கனகவல்லி நவமணி என்னும் அவ ருடைய பெண்மக்களிருவரும் அந்த வீணையைப் பல இசை யரங்குகளிலும் மாநாடுகளிலும் இயக்கிக் காட்டினர். அதனைப் பல இசையறிஞர்களும் போற்றிப் புகழ்ந்தனர்.

1917 மே திங்கள் 17 ஆம் நாள் வெங்கடராமதாஸ் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் "11, 12, 24, 48, 96 சுருதிகள் பயன்படுத்தப்பட்டுக் கீர்த்தனங்கள் பாடப்பட்டபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பரோடாவில் திருமதி மரகதவல்லி அம்மையார் பாடியதைக் கேட்டோர் இசையுலகில் ஒரு புதிய சகாப்தமே தோன்றியிருக்கிறது" என்று குறிப்பிட் டிருந்தார்.

'கருணாமிர்த சாகரம்' என்னும் நூலைப் பண்டிதர் வெளி யிட்டார். அந்நூலின் இரண்டாம் பகுதி எழுதி முடியுமுன், 1919 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31 ஆம் நாள் அவர் இம் மண்ணுலக வாழ்வை நீத்தனர். அந்நூலை அவர்தம் மகளார் மரகதவல்லி அம்மையார் எழுதி முடித்தார். அதனைப் பண்டித ரின் மைந்தர் டாக்டர் ஆ. சுந்தரபாண்டியன் அவர்கள் வெளி யிட்டார். அந்நூற்கு திரு. எம். அனந்தநாராயணன், ஐ சி.எஸ். முன்னுரை வழங்கியுள்ளார். பண்டிதர் எழுதிய கிறித்துவமதக் கருத்தடங்கிய 'நான்மறை காட்டும் நன்னெறி' என்னும் தத்துவ நூலும் முற்றுப்பெறாத நிலையிலேயே விடப்பட்டது.

பண்டிதரின் மருத்துவப்பணி, பயிர்த்தொழில், இசையா ராய்ச்சி பிற கைத்தொழில்கள் ஆகிய அனைத்தும் அவர்தம் மக்களாலும் பேரன்மார்களாலும் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பண்டிதரின் மூன்றாம் புதல்வரான ஏ. ஏ. வரகுணபாண்டியன் என்பார் 'யாழ்' என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார். இவையனைத்தும் பண்டிதரின் பணி எங்ஙனம் பயனளித்துவருகின்றன என்பதைக் காட்டுவனவாம்.

தமிழின் பெருமை

[சித்தாந்தச்செல்வர், திரு. டி. சி. சண்முகசுந்தரம் பிள்ளை, நெல்லை.]

தமிழ் மொழி தென்மொழி என்றுங் கூறப்படும். பாரத நாட்டின் தென்பாகத்திலுள்ளவர்களால் பேசப்படும் மொழி. திருக்கைலாயத்திற் பேசப்படும் மொழியாக அது திகழ்ந்து விளங்குகிறது. எம்மொழியுந் தனக்கு இணையில்லாத உயர்வொப்பில்லாத இனியமொழி. மற்றைய மொழிகளிலில்லாத ‘ழ’ கரவொற்றை உடைமையின் வீறுகொண்டெழுந்தளித்த ‘ழ’ கரமுடைய தொன்மை வாய்ந்த மொழியாகும் இது, இத்தகைய சிறப்பெழுத்தைந்தோடு கூடியவிடத்து உயிரெழுத்துப் பன்னிரண்டும், மெய்யெழுத்துப் பதினெட்டும், உயிர் மெய்யெழுத்து இருநூற்றுப் பதினாறுமாக விரிந்துகிடப்பதை நாம் தமிழிலக்கண நூல்களிற் பரக்கக் காணலாம். இத்தகைய சிறப்பு, தமிழுக்கே உரியதாதலின் பரம்பொருளாகிய சிவம் தமிழ் நாட்டவர்களுக்கு வெளிவந்து அவர்களால் பாடப்பெறுந் தமிழ்ப் பனுவல்களுக்கு, அஃதாவது தேவார திருவாசகமாதிப் பன்னிரு திருமுறைகளுக்குப் பரிசிலாகப் பரகதி கொடுத்தருளுகிறார் என்பது உலகப்பிரசித்தம். இத்துணை அருமைப்பாடு இம்மொழிக்கே சிறத்தலின் அன்பை அடிப்படையாகக்கொண்டு உலகை உய்விக்கவந்த மணிவாசகப்பிரான் பெருமானை விளிக்கும்போது, “தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை” என விளித்தார். மாதவச் சிவஞானவள்ளலும், “அன்றுதொட்டின்று காறும் அருமறை நான்குந் தேடி, நின்றலந் தோலமிட்டுங் காணொணு நிமல மூர்த்தி, இன்றமிழ்க் கலைசை வாணனியல்பினை யிரண்டு நாளில், பொன்றிடும் மனிதர் தேறி எங்ஙனம் போற்று வாரே,” என்று பெருமானுக்கு இனிமை பயக்குந் தன்மையது என்றார். குமரகுருபரவடிகள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தில், “நறைபழுத்த, துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே,” எனச் சொற்றார். இது கயிலாயத்திலும் வழங்கும் மொழி என்பது தம்பிரான் தோழராகிய நம்பியாரூரர் (நொடித்தான் மலைப்பதிகத்தில்) “இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம், வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை யருள்புரிந்து, மந்திர மாமுனிவர் இவனாரென வெம்பெருமான், நந்தம ரூரனென்றான் நொடித்தான் மலையுத்தமனே” என்று கூறினமையானும், சேரமான்பெருமாள் நாயனார் தாம் கன்னித் தீந்தமிழில் பாடியருளிய, “திருக்கைலாய ஞான உலா”வைத் தேவர்கள், மூவர்கள் யாவர்களுமறியச் சிவபெருமான் முன்னிலையில் அரங்கேற்று வைபவம் நடத்தியமையானும் விளங்கும்.

இதுவுமன்றித் தத்துவங்கடந்த தனிப்பொருளாகிய சிவம் தமிழினயங்களெல்லாம் பேசிப்பேசிக் கூத்தாடுவதென்றாற் சிற்றறிவும் சிறுதொழிலுந் துக்கவுருவுமுடைய மானுடர் முதலிய உயிர்கள் அங்ஙனம் செய்யவேண்டுமென்பது சொல்லவும் வேண்டுமோ?

தமிழினயம் பேசிப் பாடியாடுகின்றானிறைவன் என்பது பின்வரும் தேவாரப் பாவா லினிது விளங்கும்.

திருக்கானூர்—க-ஆம் திருமுறை.

"தமிழி னீர்மை பேசித்தாளம் வீணைபண்ணிநல்ல
முழவமொந்தைமல்கு பாடல் செய்கையிடமோவார்
குமிழின்மேனி தந்துகோல நீர்மையதுகொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய பவளவண்ணரே."

பன்னிரு திருமுறைகளும் பதினூல்களென்று சொல்லப்படும். அவைகளில் மந்திரமுறை என்று சொல்லப்படுந் "திருமந்திரமே," அவைகள் யாவும் மந்திரச்சொற்களாலாயது என்பதை நிலை நிறுத்தும். "நமக்கு........அர்ச்சனை பாட்டேயாகுமாதலான் மண்மேல் நம்மைச், சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்" என்று சுந்தரப்பெருமானுக்கு இங் நல்லுரை வழங்கினார் "சிவபெருமான்" என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் விதந்தெடுத்தோதியுள்ளார். பரிசுத்தமான மறையைப் பாடும் அந்த வாயினாலேயே "சொற்றமிழ் பாடுக" என்று பரம்பொருள் சொன்னமையானே தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளும் இறைவற்கே என்று துணியப்படும். இனி அறிவாற் சிவமாய் விளங்கும் ஆளுடைய அடிகள் உலகமுய்யப் பாடியருளிய ஞானப் பாடலொன்றை நீங்கள் செவ்வனே பரிசீலனை செய்தால் உண்மை விளங்கும். அவர் பாடியருளிய திருவாசகத் திருமுறையில்,

"காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்றன் னடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே."

என்ற பாவை நேர்மையாகப் படித்து, காய்தல் உவகத்தலற்றிப் பொருளாய்ந்தால் உண்மை விளங்கும். இந்தப் பாட்டில் "மூல பண்டாரம்" என்ற சொல்லிற்குரிய பொருளமைதி கண்டால், மற்றது வெளிப்படை. மூலபண்டாரம்=மூலபொக்கிஷம் அல்லது முத்திச் செல்வம். "Pandora" in classical language means—"A valuable present" இந்தச் செல்வமிருக்குமிடம் நமக்குத் திருமுறைகளே. இவை சிவனடியார்கள் தம் உள்ளத்தின்கட்

கிடக்கப்பெறுதலின் அவர்களுக்குப் பண்டாரம் எனப் பெயரா யிற்று. ஆகவே பவமாயக் கடலிலழுந்துகின்ற நம்மை எல்லாம் முத்திப்பேற்றில் சேர்க்குந் தகுதிப்பாடு அல்லது தகைமை யுடையது "பன்னிரு திருமுறைகள்" என்பது வெட்டவெளி யாம். சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அது செய்தற் குரிய வடமொழி மந்திரங்களை எல்லாம் தென்மொழியில் பொரு ளுணர்ந்து ஆக்கிக்கொண்டு தேவார திருவாசக மாதி பன்னிரு திருமுறைகளிற் கூறியாங்குள்ள பாக்களைப் பொருளுணர்ந்து மனமார நினைத்து வாயாரப் பாடி யுருகி உருகிக் கும்பிட்டால் பெருமான் வெளிவந்து அருளுவர். இதற்குச் சந்தேகமில்லை. "நீற்றுமேனி நிமலன் றிருநடம் போற்றியன்பு புரிந்துருகா நின்றுார், மாற்றருங்கதி வைகுவ துண்மையாற் சாற்றினே மிது சத்தியம் சத்தியம்," என்ற உபதேச காண்டச் செய்யுளையுமிவ் வமையத்தில் நோக்குக.

நோக்கினுல் இறைவன் நமக்குச் சிவஞானத்தை நல்கி அதி தீவிர பக்குவமுடையனுய்ச் செய்து முத்திப்பேற்றிற்கு முடுகும் வழியைக் காட்டி நம்மை யாட்கொள்ளுவன். இழிந்த மார்க்கத் துழல்வோர் தம் பிதற்றுரைகட் கணுகொணுத திருநெறிய தமிழ் வல்லவர்கள் வகுத்த செந்நெறியிற் படர்ந்து உமாநாதன் றிருவருளைப் பெறுவோமாக. வழிவழி இம்மாண்பைக் கடைப் பிடித் துய்யுமாறு எங்கள் மாதவச் சிவஞானயோகிகள், தெய் வச்சுருதி "எழுதாக்கிளவி" என்றும் அதைத் தீட்டும் பெரு மைத்தாய் விளங்குவது தமிழ் என்றும், மற்றமொழிகளுக்கு இத்தகைய சிறப்பில்லை என்றும், "தெய்வச் சுருதி தமிழ்க் கன்றித் தீட்டா நிலைமைத்து" என வாயாரப் புகழ்ந்துள்ளார். இறைவன் திருவுள்ளக்கிடக்கை இதுவாக இதற்குப் புறம்பாய்ப் பிரசாரம் செய்வோர் கயவரிற் றலையாய கயவராய்ச் சைவசித் தாந்தச் செல்வர்களால் காற்கடை கொண்டொதுக்கப்படுவர்.

நிற்க, சித்தாந்திகளிற் சிலர் தெய்வச் சேக்கிழார் திருவாக் கால், "ஆகம விதியெலாஞ் செய்தாளுயிர்கள் யாவையுமீன்ற வெம்பிராட்டி" என்று சொல்லியிருக்கிறபடியால், ஆகமப் படியே மந்திரார்த்தங்களால் பூசிக்கவேண்டுமென்கிறுர்கள். என்னே! இவர்கள் அறியாமை. ஆகமவிதி பற்றியொழுக வேண்டுமென்றுல் ஆகமவிதிகளைத் தமிழில் மொழிபெயர்த்து அக்கருத்து நெஞ்சில் இடம்பெறவே நெக்கு நெக்குருகிப் பூசனை இயற்ற வேண்டுமென்பதுதான் தாற்பரியமேயன்றிப் பிறிதல்ல. "தமிழ்க் கன்றித் தீட்டா நிலைமைத்து தெய்வச் சுருதி" என்புழி, தெய்வச்சுருதி வடமொழியின்கண் ணிருந்தாலும் அதன் கருத்தைத் தமிழ் மொழியிலாக்கி அடைவு பெறச்செய்து

தேவாரமாக உலகுய்ய வெளிப்படுத்தினர் ஞானசம்பந்தப் பெருமான் என்பதுதா னதனுள்ளுறைபொருள். சம்பந்தப் பெருமான் தேவாரத்தோடு, ஏனைய ஆச்சார்ய மூர்த்திகளா லருளிச் செய்யப்பட்ட நூல்களும் சேர்ந்த பன்னிருதிருமுறைக் கண் ணடங்கிய பேரருளாளர்கள் திருவாக்குகளும் பதிவாக் கன்றி வேறென்னென்பேம்? இவர்கள் தெய்வத் திருவாக்குகளில் கண்ட தமிழ்ப்பாக்களில் அம்புலிசூடிய வெம்பெருமான் அளவு கடந்த விருப்பமுடையான் என்பதும் அவ் வருமைப் பாக்க ளுக்கு வெளிவந்து அவ்வெம் பெருமக்கள் வேண்டியதைவேண்டி யாங்குக்கொடுத்து உதவினன் என்பது பெரியபுராணம் முதலிய நூல்களிற் பிரசித்தம். தவிர மாதவச்சிவஞான சுவாமிகள், சிவஞானபோதம் என்னும் ஒப்புயர்வற்ற திவ்விய நூலின் சிறப் புப் பாயிரத்தில், "இனி அதர்வசிகை முதலிய உபநிடதங்களிற் கூறும் பொருள்களும் சிவாகமப்பொருளே நோக்கும்வழிச் சூத்திரமும் பாடியமும் போலத் தூலாருந்ததி முறைமையா மாகலின் வேதம் பொதுநூலெனவும் ஆகமம் சிறப்பு நூலென வுங் கூறப்பட்டன. "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறனிங்கு தெரிக்கலுற்றாம்" என்றதூஉம் இம்முறை தெரிந் துணர்ந்து கோடற்கென்க.

"வேதப்பயனுஞ் சைவமும்போல்," என்பதும் அது. இவ் வுண்மையுணர்ந்து கொள்ளமாட்டாதார் உபநிடதங்கள் ஒன்றோ டொன்று முரணுமெனவும், உபநிடதங்களும் சிவாகமங்களும் தம் முள் முரணுமெனவும், சிவாகமங்களுள்ளும் ஒன்றோடொன்று தம்முள் முரணுமெனவும் மயங்கி ஒன்றன் பொருளையே பற்றி ஏனையவற்றை இகழ்வர்; தொன்றுதொட்டுவருங் கேள்வியான் அநுபவமுடைய தேசிகன் றிருவருள் பெறுமையான் என்பது. 'சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன்வசன—மாத் திரத்தே வாய்க்குநலம் வந்துறுமோ—வார்த்தகடற், றண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ—தெண்ணீர்மை யாயி தனைச் செப்பு," என்ற திருக்களிற்றுப்படியார் பனுவலும் இங்கு நோக்கத்தக்கது.

இனி மொழிபெயர்த்துக் கூறும் நூல்களிலும் ஞானமிர்தம் முதலியன பெரும்பாலும் பொதுவியல்பு மாத்திரையே கூறு தலிற் பொதுவெனவும், திருவுந்தி, திருக்களிற்றுப்படியார் முத லியன சிறப்பியல்பு மாத்திரையே கூறுதலின் உண்மையெனவுமா மென்பது — மாதவச்சிவஞானசுவாமிகள் — மாபாடியம். இத னானே "திருவுந்தி, திருக்களிற்றுப்படியார் என்னுஞ் சித்தாந்த நூல்கள், மொழிபெயர்த்துக் கூறும் நூல்கள்" என்பது சிவ ஞானசுவாமிகளாலேயே கூறப்பட்டதொரு கூற்று. திருவுந்தி

யார் திருக்களிற்றுப்படியார் என்னுமிருவகை நூல்களுக்கும் சிவஞானசுவாமிகள் உரை கூறுமையான் இவைகள் சிறப்பியல்பு கூறும் உண்மை மொழிபெயர்ப்பு நூல்கள் என்புழி, சிறப்பியல்பு கூறும் வடமொழி நூலுக்கு இவ்விரண்டும் தமிழ்மொழியிற் பெரும்பாலும் அக்கருத்துகள் மலிந்த நூல்களென்று பொருள்கொள்ளவேண்டுமே யொழிய வேறென் செய்வது? நுண்ணறிவுடையோர் இதைச் சீர்தூக்கிப் பார்ப்பார்களாக.

திருஞானசம்பந்தப்பெருமான் முதலாக நம்பியாண்டார் நம்பிகள் ஈறாக இருபத்தேழு சைவப்பெரியாரால் பாடப்பெற்ற பன்னிருதிருமுறைகளும் காலத்தாலும் சீலத்தாலும் வேறுபட்டனவாயிருந்தாலும் சித்தாந்தக் கருத்துக்கள் அத்திருமுறைகளில் முழுக்க முழுக்க நிலவுவதைக் கண்கூடாகப் பார்க்கலாம். ஆயினும் அப்பேரருளாளர்களிற் சிலர் தமிழுக்குப் பிரமாணியங் கொடுத்தும் வேறு சிலர் "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்" என இருமொழிக்கும் சமத்துவங் கற்பித்தும் பாடியுள்ளார்கள். ஒன்பதாந் திருமுறையாகிய 'திருவிசைப்பா' பாடியருளிய ஒன்பது நாயன்மார்களில் திருமாளிகைத்தேவர், "திசைக்குமிக் குலவு சீர்த்தித் தில்லைக்கூத் துகந்து தீய, நசிக்க வெண் ணீற தாடும் நமர்களை நணுகா நாய்கள், அசிக்கவா ரியங்க ளோது மாதரைப்பேதவாதப், பிசுக்கரைக் காணு கண்வாய்பேசாதப் பேய்க ளோடே," என்று வடமொழியைக் கடிந்து கூறியுள்ளார். இஃதேபோல், நக்கீர தேவரும் "கோபப்பிரசாதம்" என்ற பனுவலில், "கச்சங்கொண்டு கடுந்தொழின் முடியாக், கொச்சைத் தேவரைத் தேவரென்றெண்ணிப், பிச்சரைப் போலவோ, ராரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று, வட்டணை பேசுவர் மானுடம் போன்று" என ஆரிய மொழியை இழித்துரையாடியுள்ளார். எவ்வளவுதான் சொன்னாலும் சமயப்பற்றும் மொழிப்பற்றும் முன் வந்து நிற்கும் என்பதை இவ்விரு பெரியார்களுடைய கூற்றுக்கள் நிரூபிக்கின்றன.

ஆரியத்திலேயே அழுந்தித் துறை தெரியாது மயங்கிக் கிடந்து வைணவப் பெரியாராயிருந்து பின் சைவத் திருமுறையாராய்ச்சியிற்றலைப்பட்டுச் சைவாசாரியாராய்த் திகழ்ந்து விளங்கியவர் திருமாளிகைத்தேவர். திருமாளிகைத்தேவர் என்றமையானே யவர் வைணவப் பெரியாராய் ஒருகாலமிருந்தார் என்பது சொல்லாமே யமையும். இப்பவும் வைணவர்கள் ஆரிய வேதத்தை யுயர்த்தியும் சிவாகமங்களைப் புறக்கணித்தும் வாழுகிற வாழ்க்கை நிதரிசனம். ஆகையாலிவர் மயக்கமுறுதலுக்கு ஏதுவாயிருந்த ஆரிய வேதத்தைக் கண்டித்தார். நக்கீரரோவெனில் தமிழ்மொழியில் பெரும்புலவராகவிருந்து அம்மொழி

இப்பொழுது எங்குப் பார்த்தாலும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று பலத்த ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன. கோயில்களில் தமிழில் அருச்சனை செய்யவேண்டுமென்ற கட்சியும் வலிபெற் றிலங்குகிறது. கலியாணம், ஈமச்சடங்கு இவைகளெல்லாம் தமிழர்கள் பண்பாட்டில் நடத்தப்பட வேண்டுமென்றும் தமிழி லேயே நடத்தப்பட வேண்டுமென்றும் மக்கள் கூட்டம்போட்டு ஆரவாரம் செய்கின்றனர்.

நாளடைவில் இவ்வியக்கங்களெல்லாம் விருத்தியடைந்து சீவகாருண்ணியம், அன்பு, பரோபகாரம் என்பவற்றை அடிப் படையாகக் கொண்டு தமிழில் அருச்சனை முதலியவைகளை ஆண்டவனை உவப்பிப்பான் வேண்டிச் செய்து, வைதீகச் சடங்கு முதலியவைகளை அக் கருத்தையுள்ளிட்ட தமிழ் மொழியி லியற்றிச் சாதிப்பிணக்கை யறவே தொலைத்துத் தொண்டர் கூட் டுறவுடன் வாழ்ந்து முடிவில் நடராசப் பெருமான் குஞ்சிதபாத நீழலில் குடிபுக வேண்டுமென்பது எனது சங்கற்பம்.

மயக்கொழிக

தாய்மொழியில் எல்வாச் சடங்கு மியற்றிடநல்
வாய்மொழிகள் தாராமல் வந்தமொழி—வாய்மொழியே
என்பார்க்கிங் கென்னுரைப்பாம் ஈன்றுளைப் பேணுத
வன்பார் மனத்தரிவர் மற்று.

மற்றிம் மயக்கொழிய வண்டமிழும் மேலோங்க
உற்றபணி செய்வார் உயர்ந்தாரே—மற்றவர்தம்
செந்நெறியைப் பின்பற்றிச் சேர்வோம் திருமுறைகள்
செந்நெறிக்காம் மெய்யளவை தேறு.

ஆரியத்தை யேபெயர்த்திங் காக்க வெனநினைக்கக்
காரியமொன் றின்றூற்கன் னித்தமிழில்—சீரிய
எல்லா முளவால் இனியதிரு ஐந்தெழுத்தே
எல்லாமாம் மந்திரங்கள் ஈண்டு.

—தொண்டன்.

தெய்வத் திருமறை

[சித்தாந்தபண்டிதர், கழகப்புலவர், திரு. ப. இராமநாதபிள்ளை]

“ சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வ மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவு ளாரே. சு. கூடு. க0

பொருள்: சங்கநிதி - சங்கு போன்ற பெருஞ்செல்வம், பதுமநிதி - தாமரை போன்ற பெருஞ்செல்வம், இரண்டுந் தந்து-கிடைத்தற்கரிய இவ்விரண்டு பெருஞ்செல்வங்களையும் வலியக் கொண்டு வந்து ஒப்படைத்து, தரணியொடு - சிறந்த இந் நிலவுலகத்தோடு, வான் - (இந்திரன், நான்முகன், மால் முதலியோர்க்குரிய) மேல் உலகங்களையும், ஆள - (தனி உரிமையாக நெடுநாள் முடிவேய்ந்து) வேந்தராய் ஒருகுடைக்கீழ் ஆளும்படி, தருவரேனும் - கொடுப்பாரானாலும், மாதேவர்க்கு-(எல்லாத் தேவர்க்கும் முதல்வராய் என்றும் பிறப்பும் இறப்பும் இல்லாதவராய்ப் பேரருளே திருமேனியாகவுடைய விழுமிய முழுமுதல்வராகிய சிவபெருமானே பெருந்தேவர் என்றழைக்கப்படுவர்.) அத்தகைய பெருந்தேவர்க்கு, ஏகாந்தர் - உள்ளம் ஒருங்கி உணர்ச்சி அழுந்தி ஓவாது நினைக்கும் ஒருமைப்பண்புடையவர், அல்லாராகில் - அல்லாதவராகவிருந்தால், மங்குவார் - (திருவருளில் பொங்கிப் பொலிந்து பேரின்புற்று வாழும் பேறு இல்லாதவராய்) இருளில் தங்கிப் பிறந்து இறந்து துன்புற்று ஒளிமழுங்குவாராவர், அவர் செல்வம் - மேலே கூறிய அவருடைய அழியும் செல்வங்களை, மதிப்போம் அல்லோம் - ஒரு பொருளாக மதிக்கமாட்டோம், அங்கமெலாம் - உடலின் உறுப்புக்களெல்லாம், குறைந்து - குறைவுபடும்படியான, அழுகு - சீழ்வடிந்து அழுகிப்புண்ணாகிப் பொறுக்க முடியாத நாற்றங் கொண்டு, தொழுநோயராய் - (சிவபெருமானாலன்றி வேறெவராலும் நீக்க முடியாத காணத்தகாத) தொழுநோய் உள்ளவராய், ஆவுரித்து - (முன்) பசுக்களைத் தோலுரித்து, தின்றுழலும் - அதன் இறைச்சியைச் சுவைபடத் தின்று திரியும், புலையரேனும் - (ஆன்றோரால் என்றும் வெறுக்கப்பட்ட) கீழ்மையாகிய புலையராக இருந்தாலும், கங்கை - வான் புனலாகிய கங்கையினை, வார்சடை - தம்முடைய நீண்ட

திருச்சடையினில், கரந்தார்க்கு - மறைத்து வைத்தருளும் சிவ பெருமானுர் திருவடிக்கு, அன்பராகில் - மெய்யன்பு உடையவ ராக இருந்தால், அவர்கண்டீர் - அத்தகைய மெய்யடியார்களே, யாம் - (அடியேனும் என்னைப் போன்ற பிறரும் ஆகிய) யாங்கள், வணங்கும் - (மனத்தால் நினைந்து, வாயால் வாழ்த்தி தலையால் வணங்கி) தொழப்படும் தகுதி வாய்ந்த, கடவுளார் - கண்ணெதிரே காணப்படும் மெய்க்கடவுளராவர்.

விளக்கம்: கண்டீர், ஏ: அசைச் சொற்கள். ஒருவர் மெய் யடியாராயின பின் அவர்தம் முன்னைச்குல முதலிய புன்மைகளை யெண்ணுதல் தவறு. மேலும் அவர் உண்மையான திருநீறு சிவமணி திகழும் சிவப்பொலிவும், திருவைந்தெழுத்து நினைவும் நீங்கப் பெருதவராகவிருப்பின் அவர்தம் உடல் நோய், உளநோய் முதலியவனைத்தும் "வெற்பிற்றேன்றிய வெங்கதிர் கண்டவப், புறபனிக் கெடுமாறுபோல்" போயகலும். சிவனினைவுடை யார்க்கு உடலுயிராய்த் திகழ்வன முறையே அன்பும் அருளுமே யாம். இவ்விரண்டுமே புலாலுண்ணாமையையும், கொலை செய் யாமையையும் கொண்டு வந்து புகுத்தும். ஆகவே முன் "ஆவு ரித்துத் தின்றுழலும் புலையரெனக்" கொள்வதே ஏற்புடைத் தாம். முன் என்னும் சொல் அவாய் நிலையான் வந்தியையும்.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையர்" வரும் பிறப்பில் "அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்" அல்லலுறுவர் என்னும் மெய்ம்மை புலப்படுத்தவே இவ்விரண்டும் காரண காரியத் தொடர்பாய் அமைக்கப் பெற்றன. இத்தகைய தீரா நோய்க்குக் காரணம் கொலையும் புலையுமேயாம். அவ்வுண்மை வருமாறு:

"உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பில்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்." —திருக்குறள், ௩௩0

"பற்றுய நற்குரு பூசைக்கும் பன்மலர்.
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றூர் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றுரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே." —.௯0

எக்குலத்தாராயினும் செந்நெறித் தொண்டர் குலத்தா ராவதற்குத் திருவெண்ணீறும், சிவமணியும், திருவைந்தெழுத் தும் கைக்கொண்டு ஒழுகுதல் வேண்டும். அவ்வுண்மை வருமாறு:

"சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கல்லால்
நலமிலன் நாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே." —ச. கக. ௬.

ஒருவர் காதலுடன் "காலை நண்பகல் மாலை நள்ளிருள்" என்ற நாற்பொழுதினும் நன்றாகத் திருவெண்ணீற்றினைச் செந்தமிழ்த் திருவைந்தெழுத்தோதிச் சாம்பர் பூச்சாகவும் தண்ணீர்விட்டுக் குழைத்தும் அணிவரேல் அம்மெய்யடியார் சிவன் திருவுருத் தாங்கிய நற்றவத்தவராவர். அவரைச் சிவனெனவே கருதுதல் செந்நெறியாளரின் சிறந்த கடனாகும். சிவபெருமான் அனைத்துயிர்களிடத்தும் தினைத்தனைப்பொழுதும் நீங்காது நிறைந்திருப்பினும் திருவெண்ணீறு சிவமணி திருவைந்தெழுத்தாகிய மூன்று முறையே உடலுளம் உயிராகக் கொண்டு பொலியும் மெய்யடியார்களிடத்தில் தயிரில் நெய்போல் விளங்கித் தோன்றுவன் கண்ணெதிரே காணும் இவரைத் தேவரெனக் கொள்ளாது காணாதவிடத்துள்ள அவர் தேவர் என்னும் இரண்டு வகையால் பேசாது "ஈசன் திறமே பேணி"த் தொழுதல் வேண்டும். இவ்வுண்மை வரும் திருமறையா னுணர்க:

"எவரேனும் தாமாக விலாடத்திட்ட
திருநீறும் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்டபோது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணி
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே." ௬. ௬௧-௩.

இத் திருப்பாட்டில் 'தாமாக' என்பது பிறர் தூண்டுதலின்றி முன்னைத் தொடர்பால் சண்டேசுரர் சிவபூசை செய்தது போல் தாமாகத் திருநீறணிந்தென்பதாம். மற்றுள்ளூறையாக அணிபவர் தாம் சிவனாக என்பதாம். சிவன் என்னும் செஞ்சொல் அவாய் நிலையான் வந்தியையும். 'இவர் தேவர் அவர் தேவர்' என்பதற்குச் சார்புபற்றி இரண்டாட்டிக் கூறாது திருவெண்ணீற்றுப் பொலிவு பற்றி எல்லாரிடத்திலும் சிவன் ஒன்றுபோல் விளங்குந் திறமுன்னி அனைவரையும் சிவனெனவே கருதுதல் வேண்டும். செம்பொருட்டுணிவினராம் நன்னெறியாளர் இதனை நன்குணர்ந்து ஒழுகுதல் வேண்டும்.

"தெய்வத் திருமறையும் செய்ய பொருண்முறையும்
உய்வைத் தருந்தமிழின் ஒண்ணூல்கள்—மெய்வைத்த
காதலால் ஓதிக் கடவுள் அடிதொழுக
ஈதலால் ஊதியம்வே றின்று."

திருச்சிற்றம்பலம்.

அமரர் சண்முகம்

[திரு. M. N. நாகரத்தினம், B. A.,]

'மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே.'

என்ற புறநானூற்று வரிகளின் பொன்மொழிக்கேற்பச் சென்னை சர். தியாகராயர் கல்லூரி முதல்வர் திரு. ம கி. சண்முகம் அவர்கள் தம் புகழை உலகில் நிறுவிக் கடந்த ஜூலை 29 ஆம் நாள் (29-7-59) அன்று இறைவன் திருவடி நிழலை அடைந்தனர். கல்வி நிழல் பரப்பி அன்புக் கிளைகளில் அறிவுக் கனிகள் குலுங்கா நின்ற அருளென்னும் பெருமரம் காலப் பெரும் புயலால் வேரற்று வீழ்ந்தது. மகிழ்ந்து பாராட்டும் எல்லாவித நலன்களையும் ஒருங்கே அமையப்பெற்ற அண்ணலின் மறைவினால் பேராசிரியப் பெருமக்கள் ஓர் உயரிய உண்மை நண்பரை, தங்கள் உயர்வுக்காகப் போராடும் ஒரு பெரும் வீரரை இழந்தனர். ஆங்கிலப் பேராசிரியர்கள் நடுவில் சண்முகனார் தமிழ்ப்பற்று மிகக் கொண்ட ஒருவர். தமிழ்ப்பற்று மிகக் கொண்டவர் நாப்பண் அவர் ஓர் ஆங்கிலப் பேராசிரியர். கல்லூரிகளில் தமிழன்னை அரியணைமீது அமர்ந்து எல்லாத் துறைகளிலும் அரசோச்ச வேண்டுமென்று அல்லும் பகலும் அரும்பாடுபட்ட அழகுதமிழ்ச் சொற்பொழிவாளர் சண்முகனாரை இழந்ததால் தமிழகமே ஒரு நல்ல தமிழ்ப் பணியாளரை இழந்தது. மாணவர் உலகமோ கடமையுணர்ச்சியையும் கட்டுப்பாட்டையும் காட்டிய தந்தையை, அன்புவழி நின்று அறமுணர்த்திய அன்னையை, நல்வழிகாட்டி நடத்திச் செல்லும் நல்ல தலைவரை, இடுக்கண் வருங்கால் இன்முகத்தோடு உதவி செய்யும் வள்ளலை இழந்தது என்றால் மாணவர்தம் மனத்துயர் மாற்றலும் எளிதோ? தம் இல்லத்தையும் இதயத்தையும் எப்பொழுதும் திறந்து வைத்து இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு அறிவொளி தந்த இணையற்ற அருளொளி அணைந்ததே! அணைந்ததே!!

கல்வித்துறையில் சண்முகனார் ஆற்றிய அரும்பணிகள் அளவிலடங்கா! நடுத்தரக் குடும்பம் ஒன்றில் பிறந்து பல இடுக்கண்களை வென்று கடலலைபோல் ஓயாதுழைத்து, தம் முயற்சியால் நன்னிலை அடைந்தவர் ஆதலின் ஏழை மாணவர்கள் கல்வி பெறுதற்குத் தம்மாலான எல்லாவித உதவிகளையும் செய்து உயர்வு பெற்றார். குறைவான மதிப்பெண்கள் பெற்றுப் பிற கல்லூரிகளில் இடம் பெறாது தவித்த மாணவர்கள் அவர்தம்

கருணையால் உயர்கல்வி பெற்றனர்; உய்ந்தனர்; நடுத்தர மாணவர்களைக்கொண்டே சர். தியாகராயர் கல்லூரிக்கு நற்பெயர் வாங்கித் தந்தார் எனில் அன்னார்தம் ஆற்றலுக்கும், அறிவிற்கும் அயரா உழைப்பிற்கும் வேறு சான்றுகள் வேண்டுமோ? களிமண் கொண்டு பொற்குடம் வனைவதுபோல் நடுத்தர மாணவர்களை உயர்தர மணிகளாக்கித் தம் கைவண்ணம் காட்டினர். வறுமைப் புயலில் சிக்குண்டு வாடிடும் மாணவர்கள் தொடர்ந்து படிக்க இயலாது என்று தங்கள் குறையைக் கூறிக் கண்ணீர் உகுக்குங் கால் அவர்களின் விழித்திரையில் படிந்துள்ள பனித்திரையை மட்டும் துடைத்திலர்; அவர்கள் மனத்திலும் மகிழ்ச்சித் தென்றல் உலவுமாறு தொடர்ந்து படிக்கவேண்டிய வசதிகள் செய்திடுவார். மாணவர்களை வெறும் புத்தகப் புழுக்களாக மாற்றுமல் சிறந்த நாவலர்களாக, நடிகர்களாக, புலவர்களாக மாற்றி மாப்புகழ் கொண்ட பெரியார் மறைந்தார் என்றல் மாணவர்தம் மனத்துயர் மாற்றுதல் யாங்ஙனம்?

சண்முகனர் அவர்களின் செல்வம், கல்வி, செல்வாக்கு அத்தனையும் எளிய மாணவர்களின் நலனுக்காக ஊருணி நீர்போலும் பயன்மரம் உள்ளூர் பழுத்தாற் போலும் பயன்பட்டது. அன்ன சத்திரங்கள் ஆயிரம் கட்டுவதினும், ஆலயங்கள் பதினயிரம் கட்டுவதினும் ஆங்கோர் ஏழைக்குக் கல்விக்கண் தருதலே மேலான அறம் என்று கருதி அதன்வழி நின்று வாழ்ந்தார். கல்வி பெற்ற மாணவர்களின் வேலைதேடும் பொறுப்பையும் தாம் மேற் கொண்டு பொறுப்பு வாய்ந்த உயர்ந்த பதவிகளில் இருப்போர்க் குத் தொலைபேசி மூலம் பேசியும், நேரில் கண்டு கூறியும், பரிவுரைக் கடிதங்கள் எழுதித் தந்தும் பெரும்பணி செய்தார். பிறருக் காகப் பரிவுரைக் கடிதங்கள் எழுதி எழுதிச் சிவந்த கரங்களை உடையவராய் இருந்தார் என்று கூறின் அது மிகையன்று. அவர் ஏற்றிய மணிவிளக்குகள் எத்தனையோ இல்லங்களில் அறியாமை இல்லாமை ஆகிய இருள்களைப் போக்கி ஒளிவெள் ளம் பரப்புகின்றன.

வெள்ளுடை வேந்தர் திரு. தியாகராயர் பிற்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக வாழ்ந்து வழிகாட்டியவர். அவர் பெயரால் நிறுவப்பெற்ற கல்லூரியில், அவர் கொள்கைகளை ஏற்று மகிழ் வோடு பணியாற்றச் சண்முகனர் அவர்கள் கல்லூரி முதல்வ ரானர். கல்லூரி முதல்வர்களில் முதல்வரானர். அக் கல்லூரி யின் வளர்ச்சியையே தம் இலட்சியமாகக் கொண்டு வாழ்நாள் முழுவதும் தளர்ச்சியுருது பணியாற்றினர். பத்தே ஆண்டுகளில் சர். தியாகராயர் கல்லூரியின் புகழ்க்கொடி பட்டொளி வீசி வானளாவப் பறக்கின்றது என்றல், அது பேராசிரியரின் பெரும்

பணியினாலும் சலியாத உழைப்பினாலும் ஆயது என்பதைக் கல்லூரியின்கண் தொடர்பு கொண்டோர் அனைவரும் அறிவர். கலைத்துறை நண்பர்கள், அரசியல் தலைவர்கள், சமுதாயச் சிற்பிகள், அருள் உள்ளம் கொண்ட பொருள் வள்ளல்கள் ஆகியவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கல்லூரியை வளர்த்தார். மேலும் அதுவளர என்னென்ன திட்டங்கள் வைத்திருந்தாரோ! அவைகளையெல்லாம் காலதேவன் சிதைத்துவிட்டானே! என் செய்வோம்.

நேர்மையின் திரு உருவேயன்ன நெடிய திரு உரு, அன்பு முகம், அருளொழுகும் திருவிழிகள்! இன்சொல் பேசும் இனிய திருவாய், அஞ்சாது செயலாற்றும் நெஞ்சம், அறிவின் மிகுதி காட்டும் அகன்ற நெற்றி, அதில் இலங்கும் குங்குமம், அனைவரையும் வரவேற்று வணங்கி வாழ்த்தும் வண்மைமிகு கரங்கள்; இவைகள் அனைத்தும் சண்முகம் என்றாலே எவர் தம் நெஞ்சிலும் தோற்றும். ஐம்பதே ஆண்டுகள் வாழ்ந்து அருந்தொண்டாற்றிய அவரை இறைவன் ஏன் அழைத்துக்கொண்டான்? அல்லது அவராற்றான் எவ்வாறு அவர்மீது அன்புள்ளவரை விட்டுப் பிரிய முடிந்தது? அவர் நெடுங்காலம் வாழ்ந்து பணிசெய்ய விரும்பினாரே! ஒருவேளை ஒய்வே இல்லாது உழைத்த அவ் உத்தமர்— உயர்ந்தவர் ஓய்வுபெற வானவர் தம் பொன்னுலகே சாலச்சிறந்ததென எண்ணி இறைவன் அழைத்துக் கொண்டனனோ! எல்லாம் இறைவன் திருக்கூத்தே!

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானவர்தம் விருந்தினராகச் சென்ற வள்ளல் சண்முகம் அவர் வளர்த்த சர். தியாகராயர் கல்லூரியின் வளர்ச்சியில் தம் வாழ்வின் வெற்றிகாண உழைத்தார். அவருடைய ஆன்மா அமைதியுற அவர்பால் அன்புள்ளம் கொண்டோர் அனைவரும் அக் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆவன செய்வது ஒன்றே நன்றாகும். காலத்தை வென்றவர் சண்முகம். ஞாலம் உள்ளளவும் அவர்புகழ் நிற்கும்; நிலைக்கும்.

இறையருள்

[நாஞ்சில், திரு. கா. கணபதி]

எல்லாம் வல்ல இறையருளை
என்றும் ஏத்தி வாழ்வோமேல்
சொல்லா நிலைகள் தாமேவந்
தெய்தும் வாய்மை மொழியாமே.

தீப நாடகங்கள்

[திரு. பா. பச்சையப்பன்]

முற்குறிப்பு

சொபக்கிளியன் கி. மு. 496-ல் பிறந்தான். தொண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்தான். நல்ல குடும்பத்தில் பிறந்தவன். இளமை வளமும் நல்ல கல்வியும் பெற்றுத், தக்க காலத்தே நாட்டு அரசியலில் ஈடுபட்டு, முதுமையில் பேரும் புகழும் பெற்றவன். அவன் பிறந்த காலம் ஏதென்சு மக்களாட்சி தொடங்கி அதற்கேற்ற மக்களியக்கம் வளம் பெற்ற காலமாகும். அவன் இளம்பருவத்தினனாயிருக்கும் போதுதான் ஏதென்சு, பெரிசிய நாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கிளர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. அவனுக்கு வயது பதினாறானபோது தான் சலாமிய வெற்றி கிடைத்தது. அப்போது அவன் தான் வெற்றி விழாவில் பங்கு கொண்டு நன்கு நடத்திய இளைஞர் கூட்டடந் தேர்ந்தெடுத்த தலைவன். பின் ஐம்பது ஆண்டுகள் வரை ஏதென்சு அமைதியான வாழ்வில் இருந்து வந்தது. அக்காலத்து, சொபக்கிளியன் தனக்கு வாய்த்த அரசியல் துறைத் தொழிலோடு இலக்கியம் முதலிய பண்பாடுகளுக்கு நல்ல தொண்டினையும் செய்தான். அவனுக்கு ஐம்பத்தாறும் வயது நடந்து கொண்டிருக்கும்போது, ஏதென்சுக்கு இடுக்கண்கள் நேர்ந்தன. பிலிபோனிசியப் போரில் ஈடுபட்டு அரசியல் அமைப்பு, உயர் நிலைமை முதலியவற்றிற்காகக் கிரேக்க நாடு முழுவதும் அல்லலுறத் தொடங்கியது இப்போரில் மனவலிவும், உடல் வலிவும் இழந்து முதிய பருவத்து இறந்தான்.

அக்காலத்தியக் கிரேக்க நாகரிக நிலைமை முதலியவற்றை இலக்கிய வாயிலாகத்தான் ஒருவாறு அறிய முடிகிறது. இரோதத்தன் துசிதின் என்டாரின் அரைகுறையான இரு பெரிய சரித இலக்கியங்களைத் தவிர, துன்பியல் ஆசிரியர் ஏச்சிலன், சொபக்கிளியன், உரிபிடன் என்பாரின் இலக்கியங்களும், அரித்தொபன் இன்ப முடிவு இலக்கியமும் கிடைத்தன. கி. மு. ஏழாம் நூற்றாண்டும், ஆறும் நூற்றாண்டும் உயர் கருத்துக்களடங்கிய இசைப்பாக்களின் காலமாகும். பின் வந்த ஐந்தாம் நூற்றாண்டின் பாக்கள் முன்னவற்றைப் பின் பற்றினவே யன்றி முன்னேற்றம் வாய்ந்தவை யல்ல வெனலாம். நல்ல உரை சொல்வன்மை வாய்ந்த நாடக இலக்கியங்களும், தத்துவ நூல்களும் நான்காம் நூற்றாண்டில் தான் தோன்றின.

கிரேக்க நாட்டு நாடக மேடைகள் இன்று நம் நாடுகளில் வழங்கும் பொழுதுபோக்கு இடங்கள் போன்றவை யல்ல.

மனிதனின் உயர்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் வாயிலாகப் பயன் பட்டனவாகும்.

துன்பியல் நாடகங்கள் ஒருசில ஆண்டு விழாக்களில் நடிக்கப்பெற்றன. அக்காலைப் புதியவர்களோடு உறவாடலும், சமய்நோன்புகளும், விழாச்செய்தலும்—பதினேழாயிரம் மக்கள் கூடிக்காணும் வாய்ப்பான திறந்தவெளி மேடையில் நாடகம் நடத்தலும், ஆகிய விழாக் கொண்டாட்டங்கள் நடை பெற்றன.

எனவே, நாடகக் கலையில் வல்லவர்களுக்கு ஒரு பெரும் பொறுப்பு இருந்தது. வல்லமையைக் காட்ட வாய்ப்பும் போட்டியும் இருந்தன. துன்பியல் நாடகம் நடிப்பதற்கு எடுத்துக் கொள்ளுமுன், ஒரு கலைக் குழுவினர் ஆய்ந்து பார்த்துக் கொள்வர். நடிப்பதற்கென்று எடுத்துக் கொள்வது கிடைத்தற் கரிய ஒரு பெரிய நன் மதிப்பாக இருந்தது. இந்தப் போட்டிக்கு மூன்று துன்பியல் நாடகங்களும் தணிந்த கருத்துடன் அமைந்த வஞ்சப் புகழ் நாடக மொன்றும் ஆக ஒரு ஆசிரியன் கொடுக்கவேண்டும். இவ்வாறு மூவர் நாடகங்களை, குழுவினர் மக்களின் கருத்துக் கமையத் தேர்ந்தெடுப்பர்.

கிரேக்க நாடகங்கள் மற்ற நாட்டு நாடகங்களைப் போல் தான் இலக்கியம் முதலிய பல வற்றிற்கும் அப்பாற் பட்டதாகும். மனித இயல்பின் பல்வேறு திட்ப நுட்பங்களைக் காட்டுவனவாக நாடகங்கள் அமைந்தன.

சொபக்கிளியன் நாடகங்களில், நடிகர்களின் நடிப்பு உண்மை வாழ்வினை ஒட்டியிருக்கும். 'கோரஸ்' என்போர் நாடகம் பார்க்கும் மக்களுக்குக் கதைப் போக்கினை இசை நுணுக்கத் தொடர்பு படுத்தவும், நடிகர்களுடன் தாமும் ஆடுவர் போலும் இருப்பர். ஆயின் ஏச்சிலன் போன்றார் நாடகங்களில் 'கோரசர்' தாம் இசைத்துப் பாடியும் நடித்தும் எடுத்துக் கொண்ட கருத்தினை விளக்கிக் காட்டுவர்.

இனி, சொபக்கிளியன் நாடகத்தில் நடிகர்கள் மேடைகளில் நடிப்பர். அம்மேடைக்குச் சற்றுக்கீழே கோரசர் இருப்பர். நாடக அரங்கின் ஒரு புறத்தே யிருந்தும் மேடையருகே நின்றும் பின் மறுபுறத்துக்குச் சென்றும் அவ்வப்போது நாடக நிகழ்ச்சியுடன் ஒன்றி நடப்பர்.

கதைச் சுருக்கம்

இனி, தீப நாடகங்களின் கதைச் சுருக்கம் வருமாறு: தீபநாடு கதுமன் என்பானால் தோற்றுவிக்கப் பெற்றது.

கதுமனுக்குப் பொலிதொரன் பிறந்தான். பொலிதொரன் இலப்தகனைப் பெற்றான். இலப்தகன் இலேயனைப் பெற்றான். இலேயனுக்கும் அவன் மனைவி யோகத்தாளுக்கும் ஒரு மகன் பிறந்தான். அக் குழந்தை பிறக்கு முன்னமே, அவனுடைய பிறப்பால் வரும் பின்விளைவுகளையறிந்த பெற்றோர் குழந்தை பிறந்ததும் அதனைக் கொன்று விட முற்பட்டனர். எனவே, தம் வேலையாள் ஒருவனிடம் குழந்தையைக் கொடுத்து மலைப் பக்கத்தே காலைக் குத்திப் போட்டு விடுமாறு கட்டளையிட்டனர். ஆயின், அவ்வேலையாள் அவ்வாறு கொல்லும் மனமில்லாதவனாய்த் தீபநாட்டுக்கப்பால் இருந்த கொரிந்திய நாட்டான் ஒருவனிடம் கொடுத்துத் தன் மகனைப்போல் காப்பாற்றிக் கொள்ளச் சொல்லிவிட்டான். அவன் தன் அரசன் பொலிபனிடம் அக் குழந்தையைக் கொடுத்தான். அவ்வரசன் குழந்தை யற்றவனாகலின், அக்குழந்தையை மகிழ்ந்தெடுத்து 'ஒதிபன்' என்னும் பெயரிட்டு வளர்த்தான்.

ஒதிபன் வளர்ந்து கொரிந்த நாட்டு இளவரசனானான். வளர்ப்புப் பெற்றோர்களுக்கு அன்புச் செல்வனாக இருந்து வந்தான். ஆயினும் அவனால் பெற்றோர்களுக்குத் தீங்கு விளையும் என்னும் சொல் கேட்டு அதனை நீக்குவதற்காக அந்நாட்டைத் துறந்து வெளியேறினான். அவ்வாறு துறந்து திரிந்தபோது தீப நாட்டுக்கு வந்து விட்டான். அப்போது தீப நாட்டில் குழப்பமாயிருந்தது.

மன்னன் இலேயன் இனந்தெரியா ஒருவனால் கொல்லப் பட்டான். பிங்கினி என்னும் அரக்கி யொருத்தி தன் தந்திரக் கேள்விக்கு விடைசொல்லாத மக்களை யெல்லாம் கொன்று வந்தாள். ஒருவராலும் அவளுக்கு விடை சொல்ல இயலவில்லை. ஒதிபன் வந்தான். அவளுடைய கேள்விக்கு விடைகூறி அவளுடைய ஆற்றலை ஒழித்தான். மக்கள் அவனை மகிழ்ந் தேற்றுத் தீப நாட்டின் முடியைச் சூட்டினர். கணவனை யிழந்த அரசி யோகத்தாளை மணந்து அமைதியாக நாட்டை யாண்டான். அவனுக்கும் அரசி யோகத்தாளுக்கும் குழந்தைகள் பிறந்தன. இவ்வாறே பதினைந்தாண்டுகள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தனர். ஆயினும் அவர்கள் வாழ்வினுள்ளே மறைந்து கிடக்கும் அவமானமும் அருவருப்புமான நிகழ்ச்சிகள் அவர்களுக்குத் தெரியாமலிருந்தன. தெய்வங்கள் இனியும் இக்கேடு நீடித் திருக்கக் கூடாது என்று தீபநாட்டைப் பஞ்சம், தொற்று நோய் முதலியவற்றால் ஒழிக்க முற்பட்டன. மக்கள் அக் கொடுமைகளை ஆற்றாராய், அரசனையும் அப்பலோ தெய்வத்தை யும் அணுகினர். இங்கு நாடகம் தொடங்குகிறது.

நாடக உறுப்பினர்

ஒதிபன்	...	தீபநாட்டு மன்னன்
யோகத்தாள்	...	ஒதிபன் மனைவி
கிரியோன்	...	யோகத்தாளுடன் பிறந்தவன்
திரியோன்	...	குருடன்; உறுவதுரைப்போன்.

செய்தி சொல்லி, இடையன், வேலையாள், தீப நாட்டு முதியவர்களின் குழு, அரசனின் வேலையாட்கள், அரசியின் வேலையாட்கள், தீப நாட்டு மக்கள்.

காட்சி

தீப நாட்டு அரண்மனைக்கு முன்னால்

அரசன் மனைக்கு முன்னிருக்கும் படிக்கட்டுகளின் மேலும், பிற இடங்களிலும் தீப நாட்டு மக்கள் வணக்கத்துடன் உட்கார்ந்துகொண்டிருக்கின்றனர்.

[ஒதிபன் மத்திய வாயில் வழியாக வேலையாட்களுடன் வருகிறான்.]

ஒதிபன்: மக்களே! பண்டைய கதுமன் வழி வந்தவர்களே, நீங்கள் இவ்வாறு வணங்குவதன் காரணமென்ன? இப் பூங்கொத்துக்களும் மாலைகளும், நறுமணமூட்டும் பொருள்களும் ஏன் நிரம்பக் கிடக்கின்றன? இவைகளைப் பற்றியெல்லாம் செய்தி சொல்லிகளால் அறிவதைக் காட்டிலும் நேரில் தெரிந்துகொள்ள ஒதிபன் என்னும் யானே இங்கு வந்துள்ளேன். (பூசாரியை நோக்கி) பெருமைக்குரியவரே, தாங்கள் முதியவராதலின் இவ்வனைவருக்கும் என்ன நேர்ந்தது என்பதைக் கூறுங்கள். ஏதேனும் அஞ்சத்தக்கன நேர்ந்துள்ளதா? அன்றி ஏதேனும் வேண்டி வந்துள்ளார்களா? உங்களுக்கெல்லாம் விருப்புடன் எதையுஞ் செய்து உதவ இருக்கிறேன். இவ்வாறு அனைவரும் கூடிக்குறையிரந்து கொள்வதைக் கேளாமல் காதை மூடிக்கொள்வேனாயின் நன்னெஞ்சமற்றவனாவேன்.

பூசாரி: எம் தலைவரே! மன்னவரே!! குஞ்சு குழந்தைகளும் இளைஞரும், முதியவர்களும், பூசாரிகள் என அனைவரும் இங்கு வந்திருப்பது எதற்காகவெனின் கூறுவேன். நம் நகரத்தின் தீவினையைத் தாங்கள் காணுகிறீர்கள். பெருவாரி மக்கள் மரண அலையினால் இழுக்கப்பெற்றுத் தப்புதற்கு வழியில்லாமல் போயினர். செழிப்பான நிலவளத்திற் பிறந்தவர்களின் ஆடுமாடுகள் இறந்துபோகின்றன. குழந்

தைகள், குழந்தைப் பருவத்தேயே இறந்துபடுகின்றன. இவை யாவற்றிற்கும் காரணமான தொற்றுநோய் என்னும் அரக்கன் நகரத்தைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு, கதுமன் வழிவந்தோரை வேரறுத்து நரகுக்கு அனுப்பிக் குவித்து, அழுகையில் திளைக்கச் செய்துள்ளான்.

இப்போது நாங்கள் தங்களிடத்தில் ஏன் வந்துள்ளோம் என்றால், யானும் இந்தக் குழந்தைகளும் தங்களிடத்தில் வேண்டுகோள் செய்துகொள்ளவேயன்றி, தங்களைப் பொறுப் பாக்கவல்ல. தாங்கள் மனித வலிமைக்கு மேற்பட்ட ஒன்றை எதிர்க்க வழிசெய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்ள வந்துள்ளோம். கதுமன் நகரத்திற்குப் புதிதாக வந்த தாங்களே, எங்களை அக் கொடிய மந்திரக்காரியின் தளைகளிலிருந்து விடுவித்தீர்கள். நாங்கள் இப்படித்தான் செய்ய வேண்டும் என்று சொல்லுதற்கு உரிய அறிவு இல்லாதிருந்தும், தெய்வத்தின் உதவியால் தாங்கள் எங்களுக்கு உயிர்கொடுத்தீர்கள்.

வீரர் பெரும, இப்போது தாங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டுகிறோம்.

தெய்வமோ, கடவுளோ காட்டும் வழியொன்றைப் பின்பற்றி எங்களை இம் மரணப் படுகுழியினின்று மீட்டுக் கொடுக்க வேண்டுகிறோம். பழைய நிகழ்ச்சியினால் இப்போதும் தங்களால் இயலும் என்று அறிவோம். எனவே மனிதர்களில் மிகப்பெரியவரே நம் நகரத்தை வாழ வையுங்கள். தங்கள் பெருமைக்குப் பாடுபடுங்கள். முன்னமேயே ஒருமுறை தங்கள் திறன் வாய்ந்த உழைப்பு எங்களைக் காப்பாற்றிற்று. தங்கள் ஆட்சியில் இக் குறையும் நீக்குவீராக. நம் நகரத்தைக் காப்பாற்றி இனி என்றும் தீங்குள்ளாகாதவாறு செய்யுங்கள்.

அன்று எங்களுக்கு நல்லதிர்ஷ்டத்தைத் தந்த அவ் வான ஒலியே இன்றும் நல்லதற்கு வழிகாட்டுக. எங்கள் மன்னனாகத் தாங்கள் இருக்கவேண்டுமாயின் வாழும் மனிதர்களின் அரசனாக இருங்கள். பிணமாக வெறிச் சென்று போனபின் என்ன இருக்கிறது? கோட்டைக்குள் மனிதர்கள் இல்லையென்றாலோ, கப்பலுக்குள் மனித மூச்சேயில்லை யென்றாலோ, கோட்டைக்குத்தான் வலி வேது, கப்பலால்தான் வெற்றியேது?

(தொடரும்)

சித்தாந்த சைவத் தேர்வுகள்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தென்னிந்திய சித்தாந்த சங்கத்திலிருந்து ஆண்டுதோறும் கீழ்க்கண்ட சமயத் தேர்வுகள் நடைபெறும். இவ்வியாண்டு 1960 (1136 புரட்டாசித் திங்கள்) இறுதி வாரத்தில் நடைபெறும்.

1. சித்தாந்த இளம்புலவர் தேர்வு:

சாத்திரம்: (1) முதற் சைவ வினாவிடை (ஆறுமுக நாவலர்)
(2) பூப்பிள்ளை அட்டவணை (கழகம்)
(3) சித்தாந்தப் பிரகாசிகை ,,
(4) ஞானாமிர்தக் கட்டளை ,,
(5) திருவருட்பயன் மூலமும் உரையும் ,,
(6) சிவப்பிரகாசம் ,, ,,
(7) சிவஞானபோதச் சிற்றுரை
—கா. சுப்பிரமணிய பிள்ளை ,,
(8) சைவப்பிரகாசனம் ,,

தோத்திரம்: அகத்தியர் தேவாரத்திரட்டு ,,
திருவாசகம் (திருச்சதகம்) ,,

2. சித்தாந்தப் புலவர் தேர்வு:

சாத்திரம்: (1) இரண்டாம் சைவ வினாவிடை (நாவலர்)
(2) சிவஞானபோதச் சிற்றுரை
(சிவஞானசுவாமிகள் பொழிப்பு)
(3) சிவஞான பாடியம் (பொது அதிகாரம்)
(4) சிவஞானசித்தியார்
(சிவஞான சுவாமிகள் உரை
பொது அதிகாரம்)
(5) சிவஞானசுவாமிகள் உரைச்செய்யுள்
(6) தர்க்க சங்கிரகம்
(7) சைவசித்தாந்த ஞானபோதம்
(மறைமலையடிகள்)

தோத்திரம்: பதினோராந்திருமுறை

இளம்புலவர்த் தேர்வில் முதல் மதிப்பெண் 60-க்கு மேற் பெறுபவர்க்கு ரூ. 40/-ம் இரண்டாவது மதிப்பெண் 50-க்குக் குறையாமல் பெறுபவர்க்கு ரூ. 30/-ம், மூன்றாவது மதிப்பெண் 40-க்குக் குறையாமல் பெறுபவர்க்கு ரூ 20/-ம் பரிசளிக்கப் பெறும். புலவர்த் தேர்வில் முதல் மதிப்பெண் 60-க்குமேற் பெறுப வர்க்கு ரூ. 50/-ம், இரண்டாவது மதிப்பெண் 50க்குக் குறையா மல் பெறுபவர்க்கு ரூ. 40/-ம் மூன்றாவது மதிப்பெண் 40-க்குக் குறையாமல் பெறுபவர்க்கு ரூ 30/-ம் பரிசளிக்கப்பெறும்.

ஓம்

செவ்வேள் துணை

ஞானியாரடிகளின் நல்லுரை

[ஆவியுலகத்திலிருந்து]

திருச்செந்தூரில் விளங்கிவரும் திருக்குமரனும் சேவற் கொடியோனைச் சிந்தித்து அவனைப் பன்முறை வணங்கி அவன் கருணை எம் மெய்யன்பர்க்குக் கிடைக்க, யாமென்றுமே வணங்குவோமென்ற கருத்தை அறிய வேண்டிக்கொண்டு "திருக்குமரன் தோற்றம்" என்ற பொருளைத் தலைமையாகக்கொண்டு சிறு சொற்பொழிவு இயக்குநர் குகனருள் கொண்ட குற்றாலலிங்கம் வழித் (திருப்பாதிரிப்புலியூர் மறைத்திரு ஞானியாரடிகள்) வகைதெரியாது திகைத்துவரும் அன்பர்களுக்காக இதனை வரைகின்றோம்.

திருக்கூத்தனின் ஐந்தொழில்களில் ஒன்றாகிய அருளுதல் என்பதற்கோர் இலக்கணமாய்த் திருமுருகன் அவன் வழியே திருத்தோற்றமுற்றுப் பற்பல வடிவுகளுடன் வழக்கில் வழிபடுதற்குரிய முழுமுதற்கடவுளாய் விளங்கி வருகிறான் என்பதை எவரும் எளிதில் மறுக்க முடியாது ; மறக்கவு முடியாது. திருக்குமரன் இஞ்ஞாலத்துத் தோன்றியருளுவதற்குக் காரணம், அக்காலத்து அசுரகுலத்தவரால் சிவத்தொண்டர்களும், வைணவத் தொண்டர்களுமாய் வானுலகில் வாழ்ந்த விண்ணோர்க்கு இடையூறு விளைந்தது. அதனை அவர்களால் பொறுக்கமுடியாமல் முழுமுதற் கடவுளும், ஆலகால நஞ்சுண்டவனும், ஒவ்வொரு தொழிற்குமுரிய துறைக்கென ஒவ்வொரு வடிவையும் தன் ஆற்றலிலிருந்தே படைத்து வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் அவனே தனிப்பெருங் கருணையுடன் காத்தற்றொழிற்கும் அழித்தற் றொழிற்கும் அருளற் றொழிற்குமாய் அரியதோர் படைப்பினைப் படைத்துத் தேவர் தமக்காகவும், அவன் படைப்பாகிய நம்மெல்லாருக்குமாகவும் கனிவுகொண்டு கருணையுடன் அனுப்பியருளினன் என்பதே.

இத் தன்மைகளெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவனே திருச்செந்திலுறைபவனவன். அவனே குன்றுதோறாடல் என்பன போன்ற பற்பல இடங்களிலும் பற்பல தோற்றத்துடன் எழுந்தருளியுள்ளான். அவனருளினாலே இத் தோற்றங்களுள் அருளுடை வடிவாய்த் தனியொரு தோற்றமாய்ப் பால கோலத்துடன் திருச்செந்திலம்பதியிலமர்ந்து கருணைபொழி முகத்தின

னுய்த் திருமுகங்களோராறும், திருக் கைகள் பன்னிரண்டும் கொண்டு, அசுரர் தம்மைப் போர்முகத்தில் புறமுதுகிட்டோடச் செய்து கருணைகொண்ட முகத்தினனுயும் திருச்செந்திலம்பதி யின்கண் இவ்விரு தோற்றமுங் கொண்டருளி அமைந்தன னென்பதே அறிவுடையோர் கொண்ட கொள்கையும், அவனரு ளால் எமக்குத் தெரிந்த கொள்கையுமாகும்.

இவ்வகையான தன்மை அமையப்பட்டவனுய்த் திருச் செந்திலம்பதியில் உறைந்து அவனை வேண்டி வரும் அன்பர் குழுவிற்கு அருள்புரிந்து வருகின்றுனென்பது யாவரும் அறிந்ததே. அன்னவன் நேர் நின்று போர்புரியத் திருவுளங் கொள்ளாது அசுரர் குலத்தை யழிக்க முதற்கொளலாய்க் கொண்டது அவன் திருக்கையில் தாங்கியிருக்கும் திருவேல். அவ் வேலினுற்றுன் அவன் அசுரர் குலத்தை வேருடன் அழித் தனன். கருணைபொழி திருமுகத்துடன் இன்னெரு திருக் கையினுல் அஞ்சற்க என நமக்கு உறுதியருளும் தோற்றத் தன்மையனுய்த் திருக்கையினைத் தூக்கி நேராக நெஞ்சளவின் நிறுத்திக் காட்டியருள்கின்றனன். இதன்பொருள் எம்மிடம் வருவோர்க்கும் எம்மை நினைந்துருகுவோருக்கும் அஞ்சல் (அபயம்) இங்கிருக்கிறது என்பதே அதன் கொள்கை நிலையாகும்.

மேலும் அவன் திருக்கையிற் கொண்டுள்ள வேலை வணங்கு வதும் அவனை வணங்குவதும் ஒன்றே. வேலை வணங் குதலென்பது வேலையுடைய கருத்தாவை வணங்குத லென்றே பொருள்படும். அதனுல் வேல் வேறு அவன் வேறு என்றெண்ணுதல் ஒவ்வாதென்பது எம் கருத்து. அதனை எவரும் மறுக்கத் துணியார்கள் என்பதும் எளியனுகிய (ஞானியாரடிகள்) யான் ஞாலத்தின்கண் கண்டதும் தேற்றியது மாகிய கருத்து.

திருக் குமரவேளை நாளும் நாளும் அன்பர்கள் தம் நல்லுள்ளத்தில் எண்ணுதல் அம்மையப்பரை உன்னுதலென் பதே. வேல் வேறு சிவம் வேறு என்ற கொள்கை தவறு. ஐந்தொழிற்கும் உறைவிடமாய அங்கயற்கண்ணி பங்கன் அழித் தற்கோலத்தைத் தான் மேற்கொண்டு ஆடிய பெருமை அனைவரு மறிந்ததே. அத்தொழிலை அவனருள்கொண்டு செய்துமுடித்து, மற்றைய தொழில்களுக்குரியவற்றை அவன் தன் ஆற்றலி லிருந்தே பிரித்தெடுத்தருளினன். அன்னவனே இக்கோலங் கொண்டு நிலவுலகில் வைணவக் கடவுளாகிய திருமாலையும் தோற்றுவித்தருளினன். மேலும் எப்பணியையும் இயக்கு முன்பு அவன் தன் திருவுருவத்திற்றுனே தோன்றிய யானை

முகப் பிள்ளையாரை முதற் பொருளாக என்றும் வைத்து வணங்கும் ஒழுங்குமுறையை உலகுக்கு ஈந்த மோன நிலையினை யடைந்து உருவற்ற ஓர் அருவுருவனாய் - சிவத்து(இலிங்கம்)ணாய் அமைந்திருக்கின்றான் என்பதே உட்பொருள். இம் மெய்ம்மை யினை எவரும் உறுதியாக, மனத்திற்கொள்ளுதல் மதியே.

பின் விரிவுரை செய்வோம்.

அன்பன்

மறை ஞானியாரடிகள்

காணுவுலக வாசி.

குறிப்பு: மறைத்திரு ஞானியாரடிகள் ஆவியுலகினின்றும் ஞாலத் தோர்க்கு நல்லன புரியவேண்டுமென்னும் நன்னோக்கத்துடன் இச்சீரிய கட்டுரையை இயக்குநர் திருநெல்வேலி திரு. ஆர். என். குற்றாலலிங்கம் பிள்ளையவர்கள் வாயிலாக வெளிப்படுத்துள்ளார்கள். கட்டுரையின் கருத்துக்கள் சிறந்தனவாயிருப்பதுடன் அடிகளார் நிலவுலகத்து வாழ்ந்த காலத்து இனிய வாய்மொழியாகவும் எழுத்து வடிவமாகவும் வழங்கிய வாய்மை வண்கொடைகளை மெய்ப்பிக்கின்றமையா லீண்டு வெளியிடுகின்றோம்.

தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வு

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு 1960 சனவரி இறுதி வாரத்தில் ஆங்காங்குள்ள புலவர் கல்லூரிகளிலும், திருநெல்வேலி சென்னை போன்ற முக்கிய இடங்களிலும் நடைபெறும். தேர்வு முடிவு 1960 மார்ச்சு முதல் வாரத்தில் தெரிவிக்கப்படும். ஆதலால் விண்ணப்பங்களை கட்டணத்துடன் 1959 டிசம்பர் 10 ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

கட்டணம்:
வித்துவான் புகுமுகம் ரூ. 1/-
,, முதனிலை ரூ. 2/-
,, இறுதிநிலை ரூ. 3/-

பு சி புன்னைவனநாதன்,
புலவர்குழுத்தலைவர்,
தென்னிந்திய தமிழ்ச்சங்கம்,
98, கீழைத்தேர்த்தெரு,
திருநெல்வேலி.

தாராபுரம் விவேகானந்த சபையின்

தீர்மானங்கள்

தாராபுரம் பெரியகடை வீதி, விவேகானந்த சபையில் 16-8-1959 ஞாயிறு மாலை 6 மணி அளவில் புலவர் திரு. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் தலைமையில் தமிழன்பர்கள் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அது சமயம் திரு. மே. சி. சிதம்பரனார், அவர்களும். புலவர் கொங்குச் செல்வர், டாக்டர் எம்.ஏ. லத்தீப் அவர்களும், தமிழ்க்கடல் மறைமலையடிகளாரும், தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களும் தமிழுக்குச் செய்த பெரும்பணி குறித்தும் அவர்கள் தமிழ் உரை நடைச் சிறப்புக் குறித்தும்-அவ் வுரைநடையினை இன்று சிலர் தாழ்த்திக் கூறியது குறித்துக் கண்டித்தும் சொற்பொழிவு நிகழ்த்தினர். அக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

(1) 1959 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 1, 2 தேதிகளில் சென்னையில் நடந்த தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் ரா. ஸ்ரீ. தேசிகன் என்பவர் தமிழ்க்கடல் மறைமலையடிகளார், தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் ஆகிய முது பெரும் தமிழ்ப்பெரியார் இருவரையும் அவர்தம் உரைநடை மாண்பையும் இழித்தும், பழித்தும் பேசியமைக்கு இக்கூட்டம் வருத்தத்தையும் வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

(2) திரு. ரா. ஸ்ரீ தேசிகனின் செயல் தமிழ் அறிஞர்களையும் தூய தமிழ் நடையினையும் இழிவு படுத்துவதோடு தமிழினத்தின் உள்ளம் ஆறாப் புண்ணுறும் வகையில் அமைந்திருப்பதால் அவர்தம் தகாத செயலை உணர்ந்து, வருந்தி மன்னிப்பு வேண்டும் நிலையைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தோற்றுவித்தல் வேண்டும் என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(3) ஆண்டுதோறும் செப்டம்பர்த் திங்களில் தமிழ்க்கடல் மறைமலையடிகளார், தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் ஆகியோரின் நினைவு நாளை விழாவாகக் கொண்டாடுமாறு கல்வி நிறுவனங்கள் அனைத்துக்கும் அரசியலார் ஆணையிட வேண்டும் எனவும் இக்கூட்டம் வேண்டுகிறது.

குறிப்பு: உண்மைச் செந்தமிழ் ஆர்வமிக்க இச்சபையினர் காலத்தொடு பொருந்தத் தம் வன்மையான கண்டனத்தை வெளியிட்டுத் தனித் தமிழையும் தமிழ்ப்பெரியார்களின் பெருமைகளையும் நிலை நாட்டியுள்ளமையைப் பெரிதும் பாராட்டுகின்றோம். ஏனைக் கழகத்தினரும் இம்முறையில் முன்வருவார்களாக.

இளமைபெற்ற கதை

[திரு. சு. அ. இராமசாமிப் புலவர்]

ஒரு காலத்தில் ஓர் ஊரில் மூலன் என்னும் பார்ப்பான் ஒருவன் இருந்தனன். கல்வி கேள்விகளில் அவன் வல்லவன். அவனுக்கு மாணவர்களும் இருந்தனர். அகவை முதிரப்பெற்ற அவன் இளமை அடையவேண்டும் என்று எண்ணினான். நரை திரை போக்கும் மூலிகை கஞ்சமலையில் உள்ளது என்று உணர்ந்தான். தன் மாணவன் ஒருவனோடு மேற்படி மலைக்குச் சென்று தேடினான்.

வெகுநேரம் தேடியபின் தன் மாணவனைச் சமையல் செய்யுமாறு கூறிவிட்டுத் தான்மட்டுந் தேடிக்கொண்டிருந்தான். சமையல்செய்துகொண்டிருந்த மாணவன் பக்கத்தில் அகப்பட்ட மரக்கொம்பு ஒன்றினால் சோற்றைக் கிளறினன். அக் கோல் கருநெல்லிக்கோல் ஆகையால் உணவு கறுத்துப்போய்விட்டது. உணவு கெட்டுப்போனதற்கு ஆசிரியர் சினங்கொள்வாரே என்று அஞ்சிய அம் மாணவன் அவ்வுணவைத் தானே உண்டுவிட்டு வேறு சமையல் செய்தான். சமையல் முடிவதற்குள் அவனுடைய முதுமைபோய் இளமைவந்து பதினாறுண்டினனாக விளங்கினான்.

ஆசிரியர் வந்தால் யாது சொல்வரோ என்று அஞ்சிய மாணவன் ஓரிடத்தில் ஒளிந்துகொண்டிருந்தனன். ஆசிரியன் அங்குவந்து மாணவனைக் காணாது கூப்பிட்டனன். மறைவில் இருந்த மாணவன் வெளியே வந்தான். அடையாளந் தெரியாது ஆசிரியன் திகைத்தனன். மாணவன்தான் இளமைபெற்ற வகையைக் கூறினன்.

"உணவைக் கிளறிய கொம்பு எங்கே?" என்று ஆசிரியன் கேட்க, மாணவன் தான் அதை அடுப்பில் போட்டு எரித்துவிட்டதாகக் கூறினன். ஆசிரியன் வருந்தினான். "உன்னுடைய வாயில் உடனே விரலைவிட்டு நீ உண்ட உணவை வாந்தி செய்வாயாக" என்றனன். மாணவனும் அவ்வாறே செய்ய ஆசிரியன் அதனை உண்டு தானும் இளமை பெற்றான். இவ்வாறு இருவரும் இளமை பெற்றார்கள்.

[கரபுரநாதர் 'புராணம் கஞ்சமலைச் சருக்கத்தில் கூறப்பட்ட இச் செய்தியைக் கொங்குமண்டல சதக உரைகாரர் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.]

"அந்தமா ணாக்கன் தன்னை அடுகைநீ செய்யென் றோதி
புந்தியின் மருந்து தேடிப் போயினன் அயலிற் சீடன்
உய்ந்திடக் கருநெல் லிக்கொம் பொன்றினால் அனந்து ழாவ
வெந்தனங் கரிபோ லாக வெருவிஅன் னத்தை உண்டான்.
நரைதிரை மாறி மேனி நடந்தவீ ரெட்டாண் டேபோல்
புரையிலா அழகு பெற்றுப் புடமிடு பொன்போல் ஆனான்.
துழாவிய கொம்பெங் கென்றான் சுல்லியிற் போட்டேன் என்ன
வழாதுநீ உண்ட சோற்றை வாயினிற் கக்கென் றோத
விழாதசோ றதனைக் கக்க மிச்சிலைக் குருவும் உண்டான்
தொழாரெவர் இவர்கள் தம்மைச் சுந்தரப் பால ரானார்."

---

*இன்புற என்தனி நாடு எழுக!

[வித்துவான், மாவை. துரை. பழநி மகாதேவன்.]

யாங்ஙனம் உள்ளம் அச்சம் நீங்குமோ,
யாங்கு தலைநிமிர் செலவுண்டோ, யாங்கு
யாவரும் அறிவொளி பெறுவரோ, யாங்கு
முன்பழை குறுகிய கொள்கையாம் குறுஞ்சுவர்
அதனாற் பிரியுத லில்லதோ, யாங்கு
பேருண்மைப் புதையில் பெரியதோர் சொற்றான்
தோன்றுத லுண்டோ, தொலையா அயரா
உழைப்பான் முழுதும் உரிமை எய்துமோ,
யாண்டு பகுத்தறி வாம்பேரி யாறு
மூடக் கொள்கையாம் முழுப்பாலை தன்னில்
சுவறித்தன் தோற்றம் வழிகளை இழத்தல்
இல்லதோ, யாங்கு எண்ணமும் செயலும்
தொடர்ந்தினி தியங்க உளமுந்தப் பெறுமோ,
ஆண்டு வீடதாம் விடுதலை சிறக்க
இன்புற என்றனி நாடுதான் எழுகவே!

---

* தாகூரது கீதாஞ்சலி பாடலொன்றின் தழுவல்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) ஆங்கிலத்திற்கும் இடமுண்டு

"ஆங்கிலத்திடம் எனக்குத் தனிப்பற்று உண்டு. தொழில் நுட்ப அறிவு வளர்ச்சிக்கு அஃது இன்றியமையாதது...மக்களுக்குத் தேவைப் படும்வரை ஆங்கிலம் மற்றொரு ஆட்சிமொழியாக இந்தியாவில் நீடிக்க வேண்டும்...இந்தி பேசாத மக்கள்மீது இந்திமொழியைத் திணிக்க லாகாது. இந்தி படிப்படியாக வளரும்வரை மாநிலங்கள் ஆங்கிலத் தைப் பயன்படுத்த அனுமதியளிக்க வேண்டும்" இவை கடந்த 7-8-59 இல் மக்கள் மன்றத்தில் பேசியகாலை இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள்.

மேலும் 4-9-59 இல் நடைபெற்ற விவாதத்தின்போது "ஆங்கிலம், இந்தியோடு இணைந்து ஆட்சிமொழியாகவே 1965-க்குப் பிறகும் நீடிக்கும். இதில் எவ்விதத் தடையுமிராது. ஆட்சிமொழிக் கொள்கையில் கட்டாயம் எதுவுமிராது. இந்திமொழி பேசாத மக்களுக்கு வேலைதரும் வகையிலோ பணித் துறையிலோ எத்தகைய இடையூறுகளும் இந்தியால் ஏற்படாதவாறு சட்டம் இயற்றப்படும். இந்திமொழியிடம் ஆர்வம் கொண்டவர்கள் இந்தியைப் பரப்பக் கொள்ளும் வெறிதான் இந்தி பேசாத மக்களுக்கு எரிச்சலையூட்டுகின்றது. இந்தியை ஆட்சிமொழி யாக்குவதும் ஆக்காததும் இந்தி பேசாத பகுதியில் வாழும் மக்களின் ஒத்துழைப்பைப் பொறுத்தே அமையவேண்டுவதாகும்" எனப் பேசி யுள்ளார்.

குறிப்பு: ஆங்கிலத்தின் இன்றியமையாமையையும், இந்தித் திணிப் பால் விளையுந் தீமைகளையும் உணர்ந்து அமைச்சரவர்கள் பேசியிருப்பது வரவேற்கத்தக்கதே. எனினும், இந்திபால் அவர் கொண்டிருக்கும் கருத்துக்கள் மேலும் மாறவேண்டும். எவ்வகையினும் இந்திக்கு ஏற்றம் இருத்தல் ஆகாதெனவும், விரும்பிப் படிப்பவர்கள் படிக்கலாம் என்றும் சட்டமியற்றும் அளவுக்கு மனமாற்றம் தேவை.

(உ) தமிழ் கற்க உருசியர் ஆர்வம்

"ஒரு காலத்தில் எல்லாத் துறைகளிலும் சிறப்படைந்திருந்த தமிழ் மக்களின் வரலாற்றை அறிய உருசியர் (ரஷியர்) விரும்பு கின்றனர். தமிழ் இசை, ஓவியங்கள் கல்வெட்டுக்கள் முதலியவற்றை அறிய அவர்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர்" என்று சென்ற திங்களில் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் தொடக்கவுரை ஆற்றிய உருசியப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதிப் பேராசிரியர் திருவாட்டி எம். ஆதிலட்சுமி அம்மையாரவர்கள் குறிப்பிட்டார்கள்.

குறிப்பு: மற்ற நாடுகளைவிட ரஷியா தமிழகத்தைப் பற்றி அதிகம் அறிந்துகொள்ளல் வேண்டும். ஏனெனில் பண்டைத் தமிழகம், அரசியல், பொருளியல் துறைகளில் சிறந்து விளங்கிய நாடு. அதற்கு இலக்கிய ஏடுகளில் சான்றுகள் பல உள. அம்மையார் போன்றவர்கள் அவற்றை மேலும் உருசியர் உணர வழிவகை காண்பார்களாக.

(ங) இந்தி வெறியர்க்கு திரு. ஈ. வி. கே. சம்பத் இடித்துரை

"முதல் அமைச்சர் இன்றைய நிலைக்கேற்ப மொழிபற்றி உறுதி மொழி தந்திருக்கிறார். ஆனால் உள்நாட்டு அமைச்சரின் பேச்சு தெளிவில்லாததாகவும் ஏமாற்றமளிப்பதாகவும் இருக்கிறது. இந்தி வெறியர்கள் ஆணவத்தோடு பிறமொழிகளையும் பண்புகளையும் அலட்சியப்படுத்துகின்றனர். எப்பாடுபட்டாயினும் இந்தியை ஆட்சிமொழி யாக்க முனைந்துள்ளனர். பீகாரில் வங்காளிப் பள்ளிகளை மூடியதும், உத்தரப்பிரதேசத்தில் உருதுமொழிக்கு வட்டாரமொழிக்குரிய தகுதி அளிக்கப்படாததும், தென்னாட்டில் மைல்கற்களில் இந்தி எண்கள் பொறிக்கப்படுவதும் ஆன செயல்கள் இந்த ஆணவத்தையே காட்டு கின்றன. பெரும்பான்மை பலத்தால் இந்தியைத் திணிக்க முயன்றால் அது வெற்றிபெறாது" என்று கடந்த 2-9-59 இல் இந்தியப் பாராளு மன்றத்தில் ஆட்சிமொழி பற்றி நடைபெற்ற விவாதத்தின்போது திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

குறிப்பு: ஆட்சி மொழியைப்பற்றி அரசியலார் அடுத்தடுத்துத் தெளிவில்லாத கருத்துக்களை வழங்கிவரும் இவ்வேளையில் திரு. சம்பத் அவர்களின் இடித்துரை ஏற்ற பலனைத் தருமென நம்புகிறோம்.

(ச) சென்னைக் காவல்துறை நூற்றாண்டு விழா

சென்னைக் காவல்துறையின் நூற்றாண்டு விழா கடந்த ஆகஸ்ட்டுத் திங்கள் இறுதியிலிருந்து செப்டம்பர்த் திங்கள் முதற்கிழமை முடியக் கொண்டாடப்பெற்றது. சென்னைக் காவல்துறையினரின் அரிய தொண்டினைப் பாராட்டி நாட்டிலுள்ள அமைச்சர்கள், அறிஞர்கள் நல் வாழ்த்துக்கள் அனுப்பியிருந்தனர். நகரில் பல கேளிக்கைகள் காவற் றுறையினரால் நடத்திக் காட்டப்பட்டன; ஊர்வலங்கள் நடைபெற்றன.

குறிப்பு: மற்ற மாநில காவல்துறையினரைவிடச் சென்னை மாநிலக் காவல்துறையினர் பல்லாற்றானும் திறம்படைத்தவர் எனப் புகழப் படுதலை நாடு அறியும். இத்தகைய காவல்படையினரின் பணியினைப் பாராட்டுகிறோம்—வாழ்த்துகிறோம். விழாவோடு நின்றுவிடாது காவல் துறை ஊழியர்களின் வாழ்வு வளம்பெறவும் அரசினர் வழிகோலுவார் களாக.

மதிப்புரை

"சைவ வழிபாடு"

இச் சீரிய நூற்றொகுப்பினைத் தொகுத்துப் பதித்து வெளியிட்ட பதிப்பாசிரியர் திரு. இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை அவர்களாவர். இதன் விலை முப்பது காசு. இந் நூற்கண் திருமுறைகள், திருத்தணிகைப் புராணம், தொண்டர் புராணம், அருணகிரியார், தருமையாதீனம், காசி ரகசியம், சிவஞானமுனிவர், இராமலிங்க அடிகள், தாயுமானவர், சிவப்பிரகாசர் முதலிய திருவருள் நூற்களின் திருப்பாடல்களாக அறுபத்துமூன்று திருப்பாடல்கள் இறைவணக்கம், வேண்டுகோள், நன்னெறியொழுக்கம், உறுதி கடைப்பிடித்தல், முப்பொருண்மை, முழுமுதற் றன்மை முதலிய பல சிறந்த தலைப்புக்களில் அமைக்கப்பெற்றுள்ளன. தலைப்பமைப்பு முற்றும் பாட்டுக்களின் உள்ளுறையாக அமைந்துள்ளமை பெரிதும் பாராட்டுதற்கு உரியதொன்றாகும்.

மேலும் முற்பகுதியில் "சைவ நன்னெறி" யெனவும் பிற்பகுதியில் "சைவத்தின் சிறப்பு" எனவும் இரண்டு சிறந்த கட்டுரைகளும் விளங்கிப் பொலிகின்றன. சித்தாந்த சைவத்தின் சீர்மைபற்றி ஆங்கிலத்திலொரு கட்டுரையும், இக் குறிக்கோளை வலியுறுத்துவதாகிய மேற்புல அறிஞர் பற்பலரின் மூதுரைகளும் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இந் நூல் தொகுப்பாசிரியரவர்களின் அறுபத்துமூன்றாம் அகவை நிறைவின் நினைவாகும். நல்ல பதிப்பு. கிடைக்குமிடம், இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, பிள்ளையகம், இராசபாளையம். இங்ஙனம் செந்நெறிச் செல்வர்கள் ஒவ்வொருவரும் தத்தம் நினைவாகச் சின்னஞ்சிறிய நூல்கள் பல வெளியிட்டுச் செந்நெறியினைப் பேணுதல் சிறந்த சிவபுண்ணியமாகும். இந் நூலினைப் பொதுவாகச் செந்தமிழன்பர்களும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களும் பெற்றுக் கற்றுப் பயன் எய்துவார்களாக.

"தேவாரத் தல வணக்கம்"

காரைக்குடி "சிவநேசர் திருக்கூட்ட"த்தார் வெளியீடு. இவ் வெளியீடு நன்கொடையாக வழங்கப்படுவது. ஆனால் அஞ்சற்செலவின் பொருட்டுப் புதுக்காசு எட்டு அஞ்சற்றலை அனுப்புவித்தல் வேண்டும். இது செந்நெறிச் செல்வர்கள் அனைவர்கட்கும் கிடைத்தற்கரிய இன்றியமையாச் சீரிய நூலாகும். சிவபெருமான் வீற்றிருந்தருளுவதும், நால்வர் நாயன்மார்களால் திருப்பாடல்கள் பெற்றதுமாகிய திருவூர்கள் இருநூற்றெழுபத்தைந்தாகும். இவ் வூர்களை நாளும்சென்று நற்றமிழ்மாலை சாற்றி வழிபடுதல் இறப்பில் நற்றவமும் ஈடில் சிவத்தொண்டுமாகும்,

சோழநாட்டுத் திருப்பதிகள் நூற்றுத்தொண்ணூற்றொன்று, ஈழ நாட்டுத் திருப்பதிகள் இரண்டு, பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதிநான்கு, சேரநாட்டுத் திருப்பதி ஒன்று, கொங்குநாட்டுத் திருப்பதிகள் ஏழு, நடுநாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டு, தொண்டைநாட்டுத் தலங்கள் முப்பத்திரண்டு, துளுவநாட்டுத் திருப்பதி ஒன்று, வடநாட்டுத் திருப்பதிகள் ஐந்து ஆக ஒன்பான் வகைய நாட்டுத் திருவூர்கள் இருநூற்றெழுபத்தைந்தாகும்.

இத் திருவூர்களை நாளும் நாம் நினைவுகூர்ந்து மலர் தூவிப் போற்றித் தொழுதல் வேண்டும். அதற்கு ஏற்புடைத்தாக இந்நூல் போற்றியென முடிகின்றது. இதனையும் திருக்கோவில் வழிபாடு, திருமட வழிபாடு, பொதுநிலைய வழிபாடு, வீட்டு வழிபாடு முதலியவற்றில் அருச்சனை நூலாகக் கைக்கொண்டொழுகுவது சாலச்சிறந்ததாகும். இதுபோன்ற சிவத்தொண்டு முதலியவற்றில் செந்நெறிச் செல்வர்கள் ஒவ்வொருவரும் முந்துறவேண்டுமென அன்பொடு மொழிகின்றோம்.

மறைமலையடிகள் நூல்நிலையத்தின்

முதலாண்டு நிறைவு விழா

13-9-1959 ஞாயிறு மாலை 5 மணிக்குச் சென்னை இலிங்கச் செட்டித் தெரு, நூலகக் கட்டிடம், திரு மல்லீசுரர் கோயில் மண்டபம் இவற்றிற்கு முன், சென்னை உயர்நீதி மன்ற நடுவர் உயர்திரு. வி. சுப்பிரமணிய நாடார் அவர்கள் தலைமையில் நடைபெறும். உயர்திரு. ஆர். சனார்த்தனம் நாயுடு அவர்கள் கொடுத்து வாங்கும் பகுதியினைத் திறந்து வைப்பார்கள். செந்தமிழ்க் காவலர், டாக்டர், அ. சிதம்பர நாதன் செட்டியார், எம். ஏ., எம். எல். சி. அவர்கள் மறை திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய மறைமலையடிகள் வரலாற்று நூலை வெளியிடுவார்கள். கீ. இராமலிங்க முதலியார் எம். ஏ., அ. மு. பரமசிவாநந்தம் எம். ஏ. எம். லிட்., கு. அண்ணல்தங்கோ, க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ., இரா. பாலகிருட்டிண முதலியார் பி. ஏ. எல். டி. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.



நூல்நிலைய ஆண்டுவிழாக் காட்சி



சங்க அமைச்சர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள்
வரவேற்புரை நிகழ்த்துதல்



உயர்நீதிமன்ற நடுவர் திரு. வி. சுப்பிரமணிய நாடார் அவர்கள் தலைமையுரை ஆற்றுதல்



டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியாரவர்கள் மறைமலையடிகள் வரலாற்று நூலை வெளியிடுதல்